# ஞானசம்பந்தம்

தருமைய[illegible] திங்கள் இதழ்

மலர் 40 ] துன்மதி ஆண்டு புரட்டாசி [illegible] 10—10—81 [ இதழ் 1

தருமையாதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம்



ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமி[illegible]

—: பத்தாவது ஆண்டுக் குருபூஜை விழா :—

20—10—81 செவ்வாய்க்கிழமை

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[★]—

நானே தனுகரணம்
  நானே மலமாயை
நானே இவைகள்
  நடத்துவது — நானேதான்
பூண்ட வினை அறுப்போன்
  புண்ணியபா வம்புரிவோன்
ஆண்டவனே சொக்கநாதா.

— சொக்கநாத வெண்பா. 81

ஆசிரியர் :-

வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
**சி அருணவடிவேல் முதலியார்**

உ
குருபாதம்

# " ஞானசம்பந்தம் "


**தருமையாதீனத் திங்கள் இதழ்**

மலர் 40 | 10–10–81 | இதழ் 11


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | தஞ்சையில் தமிழுக்கு அரியணை | 481 |
| 2 | ஸ்ரீலஸ்ரீகயிலைக்குருமணி | 486 |
| 3 | தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை... | 487 |
| 4 | தெய்வ ஒளி போற்றுவோம் ... | 491 |
| 5 | ஹரிஜனக் காலனிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்கள் விஜயம் ... | 492 |
| 6 | திருஅஞ்சைக்களம்... | 493 |
| 7 | திருக்குடவாயில், திருச்சேறைத் தலச் சிறப்புக்கள் ... | 497 |
| 8 | அபிராமி அந்தாதி ... | 507 |
| 9 | கவிதை அலைகள் ... | 513 |
| 10 | ஜலதோஷம் ... | 516 |
| 11 | செய்திகள் ... | 519 |
| 12 | கடிதம் ... | 522 |
| 13 | எதிர்காலம் ... | 523 |



ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 12
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 18
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 40 | துன்மதி - புரட்டாசி - 10—10—81 | இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## தஞ்சையில் தமிழுக்கு அரியணை

### வரலாற்றுச் சிறப்பு

'வாழிய செந்தமிழ்: வாழ்க நற்றமிழர்: வாழிய பாரத மணித்திருநாடு' என்று வாழ்த்துரைத்தார் அமரகவி பாரதியார். 'என்றுமுள தென்தமிழ்' என்று கம்ப நாடரும், 'ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்' என்று சேக்கிழார் பெருமானும் தமிழுக்குச் சொல்லாரங்கள் சூட்டினர். சிவ பெருமான் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளாகவும், உமை யம்மை தடாதகாதேவி என்ற பெயரோடும், செவ்வேள் உக்கிரகுமாரபாண்டியனாகவும் மதுரையில் அமர்ந்து சங்கத் தமிழ் வளர்த்தனர் என்பர் உரையாசிரியர்கள். உளஇயலாக - வாக்கிசையாக இமயக்கூத்தாகப் பிரிந்து நின்று பெருமிதமுற்று வளர்ந்த நமது தமிழன்னைக்கு - தஞ்சை மாநகரில் தனியே ஓர் பல்கலைக்கழகம் அமைவது வரலாற்றுச் சிறப்பு மிக்க பெருமித மாகும்.

## கடமையும் பொறுப்பும்

அச்சு இயந்திரம் ஏறி, சாகாவரம் பெற்ற தமிழ்மொழியும், இதன் இலக்கிய, இலக்கண வளமும் இவ்விருபதாம் நூற்றுண்டில் பல்முனை நின்று சிறப்பாக ஆராயப்பெற்று வருவது பெருஞ்சிறப்பு. தமிழகப் பல்கலைக்கழகங்களும், தமிழ் வளர்ச்சி நோக்கில் அமைந்த நிறுவனங்களும், தமிழ்ப் பேரறிஞர்களும் இவ்வகையில் ஆற்றி வந்திருக்கும் சிறப்பான பணிகள் பாராட்டற்குரியன. என்றுலும் பலநூறு ஆண்டுகளாக வளர்ச்சி குன்றியிருந்த தமிழ்மொழியில் இன்னும் ஆய்வு மேற்கொள்ள நூற்றுக்கணக்கான புலங்கள் உள்ளன. வளர்ந்து வரும் உலகின் வேகத்திற்கு ஈடு கொடுக்கும் ஆற்றலை நமது தாய்மொழிக்கு வழங்க வேண்டிய கடமையும் பொறுப்பும் நம்மவர்க்கே உரியன.

## அரசின் கடமை

புலவர்களைப் போற்றி ஆதரிக்க இன்று மூவேந்தர்களோ, குறுநிலமன்னர்களோ இல்லை. புலவர்கள் அமர்ந்து இனிது ஆய்வு மேற்கொள்ளத் தமிழ்ச்சங்கம் வளம் பெற்றிருக்கவும் இல்லை. தமிழ்வளர்ச்சிக்கென்று பெரும் பொருட்செலவுசெய்யும் செல்வர்களும் நம்மிடையே இல்லை. 400 ஆண்டுகளாகத் தனித்து நின்று தமிழ்வளர்த்த சைவத்திருமடங்களுக்கோ போதிய நிதிவசதிகள் இல்லை. இந்த நிலையில் தமிழ்வளர்ச்சியை அரசே மேற்கொள்வதைத்தவிர வேறு வழியில்லை. தமிழின் முனைப்பான பல்முனை வளர்ச்சி நோக்கில் இதற்கெனத்தனிப் பல்கலைக்கழகம் அமைக்கும் தமிழ்நாடு அரசின் நல்லெண் ணத்தை – நற்செயலைத் தமிழ்மக்கள் ஒருமனதாகப் போற்றுவர் என்பதில்ஐயமில்லை. பல்கலைக்கழகம் தமிழுக்காக – தமிழ்க்கலை வளர்ச்சிக்காக அமைவதனுல் தனிப்பட்ட விருப்பு – வெறுப்புக் களை மறந்து அனைவரும் புதிய பல்கலைக் கழகத்திற்கு நேசக் கரம் நீட்டுவர் என்றே நம்புகின்ரேம்.

## ஆய்வு மையம்

தீவிரமான திட்டமிடுதலுக்குப்பின் தமிழ்ப்பல்கலைக் கழகம் தொடங்கப்படுவதாகத் தெரியவில்லை. முதற்கண் ஆறு துறை களில்இப்பல்கலைக்கழகம் மேல்நிலைஆய்வுகளை மேற்கொள்ளப் போவதாக அறிகிரேம். கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப் புலம், மொழிப்புலம், அறிவியல்புலம் என்ற ஆறு துறைகள்

அமைவதாக அறிவிப்புக்கள் கூறுகின்றன. இப்பல்கலைக் கழகம் கல்லூரிகளை இணைத்து நின்று இயக்காது, தனி ஆய்வு மையமாகவே தற்போதைக்குச் செயற்படும் என்று தெரிகிறது. ஏறத்தாழ ஓராண்டுக்குப் பின்னர்தான் இதன் உண்மையான நோக்கம் நமக்குத்தெரியவரும். என்றாலும், தமிழ், தமிழ் சார்ந்த கலை வளர்ச்சியில் இதன்பங்கு குறிக்கத்தக்கதாக அமையு மென்று நம்பலாம்.

## தமிழ்மக்களின் எதிர்பார்ப்பு

அறிவியல் நோக்கில் தமிழாராய்ச்சி மேற்கொள்ள இப் பல்கலைக்கழகம் வழிதிறந்துவிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. தமிழ் இலக்கியங்களில் பல்வேறு அறிவியல் கூறுகள் உண்டு. 'வலவன் ஏவா வான ஊர்தி' என ஒரு விண்விமானம், புறப் பாட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. சிந்தாமணியில் ஒரு மலர் விமானம் பேசப்படுகிறது. பெருங்கதையில் ஒரு இயந்திரத் தேர் பற்றிய பேச்சு உண்டு. இவ்வாறான குறிப்புக்கள் மிகப்பல. வானநூற்கலையிலும் தமிழர் மேம்பட்டிருந்தனர். கணித அறிவால் பஞ்சாங்கங்களை உருவாக்கினர். சந்திர – சூரிய கிரகணம் போன்றவற்றைத் துல்லியமாகக் கண்டு கூறினர். இவ்வாறான அறிவியல், வானியல் பற்றிய பல அரிய சுவடிகள் தஞ்சை சரஸ்வதி மகாலில் இருப்பதாக அறிகிறோம். மண்ணின் மேற்பரப்பில் காணப்படும் சில தாவரங்கள், இயக்கங்கள் இவற்றைக் கொண்டு உள்ளே புதைந்திருக்கும் கனிவளங் களைக்கூறும் சுவடிகளும் பல அங்கே உள்ளன எனக்கூறப் படுகிறது.

இவற்றை எல்லாம் உடனடியாக ஆராய்ந்து வெளிப் படுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் இப்பல்கலைக் கழகத்திற்கு உண்டு. பல்லவர்காலத்தில், ஒரு அமைச்சர்மகன் வரதராசன் என்பான் பலசுவடிகளைக் கீழைநாடுகளுக்குக் கப்பல்வழியாகக் கொண்டுசென்றபோது கடல்கோட்பட்ட தாக அறியப்படுகிறது. இவற்றின் உள்ளீடுகள் எவைஎன்பதை யும் அறிய இப்பல்கலைக்கழகம் முயலவேண்டும். அறிவியல் – தொழில்நுட்ப வளர்ச்சியில், தமிழும்உரியபங்காற்ற நெகிழ்ச்சிப் போக்குடன் புதியகலைச் சொல்லாக்கங்களிலும் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஈடுபடவேண்டுமென்று அனைவரும் எதிர் பார்ப்பர். பழைய போக்கினைக் கைவிட்டுப் புதிய வளங்களைக் கைக்கொள்ளத் தமிழ்ப் பல்கலைக்கழகம் புதிய எழுச்சியோடு தொண்டாற்றிச் சிறக்க வேண்டுமென்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

## பல்துறை படைப்போம்

தமிழ்ப்பல்கலைக் கழகத்தைத் தனி ஆய்வு மையமாக நடத்தாது, பல்வேறு தமிழ்க்கலை பயிற்றும் கல்லூரிகளை இதனோடு இணைப்பது பயன்நல்கும். தனித்தமிழ்க்கல்லூரிகள் பழநி போன்ற இடங்களில் உள்ள கீழைக்கலைப் பண்பாட்டுக் கல்லூரிகள், நாதசுவர இசைக்கல்லூரிகள், நாட்டியம்பயிற்றும் கல்லூரிகள், மாமல்லபுரம் சிற்பக்கல்லூரி போன்றவைகள், சித்தமருத்துவக்கலைக் கல்லூரிகள் போன்ற தமிழ்மொழி மற்றும் கலை, கலாசாரக்கல்லூரிகளை இப்பல்கலைக்கழகம் தன்னுள் கொண்டு விளங்குதலே இதன் உண்மையான வளர்ச்சிக்கு உதவியாக அமையும். இவ்வகையில் அறிஞர்களும் அரசும் சிந்திப்பது பயன்தருவதாகும்.

## தமிழ் வளர்த்த தஞ்சை

தஞ்சை மாநகரில் தமிழ்ப்பல்கலைக்கழகம் அமைவது பெரிதும் பொருத்தமானதே. காவிரிவளத்தால் தமிழ்நாட்டுக்கே சோறு வழங்கும் தஞ்சைத்தரணி, கலைவளத்தால் உலகுக்கே ஒளியூட்டும் சிறப்பினது. தமிழகக்கட்டடம் மற்றும் சிற்பக் கலைக்கு அழியாத சான்று கூறும் பெரிய கோயில்கள் தஞ்சை மாவட்டத்தில்எண்ணற்றன உண்டு. இசைவளர்த்த மும்மூர்த்திகள், தமிழ்க்கீர்த்தனைகள்வடித்த சீகாழி அருணாசலக்கவிராயர், முத்துத்தாண்டவர், வேதநாயகர் போன்ற பெரியோர் பிறந்த மண் இது. நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தரும், பட்டினத்தாரும், தாயுமானவரும் பாடிய பல்லாயிரம் பாடல்களால் பரவசமுற்ற மண் தஞ்சைமண். பரதநாட்டியமும், நாதசுரமும், வாய்ப்பாட்டும் இம்மண் தந்த வளங்கள். தமிழ்வளர்க்கும்தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் திருமடங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கன. தனித்தமிழ்இயக்கம் கண்ட மறைமலையடிகளும், நடைநலம்போற்றிய திரு. விக. வும், கல்கியும் இம் மண்ணின் மைந்தர்கள். பிற்காலச் சோழர்காலந்தொடங்கி, பெருமிதமுற்றுவரும் சோழர் தலைநகரில்தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைவதுஅனைவருக்கும் மகிழ்ச்சிதருவதாகவே அமைகிறது.

## உணர்ச்சி அதிகம்; வளர்ச்சி குறைவு

புதிய கலைத்துறைகளை மேலைநாடுகளில் இருந்துகொண்டு வந்து தமிழில் சேர்க்கும் முயற்சியில் இப்பல்கலைக்கழகம் ஒரு புதிய வழிகாட்டியாக அமையும் என்று நம்புகின்றோம்.

வளர்ந்துவரும் பல்வேறு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கலைகளைத் தமிழில் கற்கும் வாய்ப்பினை இங்குள்ள மொழியியல் அறிஞர்கள் தமிழிற்கும் – தமிழ் மக்களுக்கும் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம். மொழிபற்றி நம்மவர்கள் மத்தியில் நிலவும் உணர்ச்சி அளவிற்கு இங்கே வளர்ச்சி இல்லை என்பதை நடுநின்று சிந்திப்போர் நன்கு உணர்வர். வெறும் கோஷங்களாலும், வாழ்த்துக்களாலும் எந்தமொழியும் வளர்ந்ததாக வரலாறு இல்லை. பொறுப்பான திட்டமிடுதலும், உழைப்புமே மொழிவளர்ச்சிக்கு அடிகோலுவன. தனிநபர்கள், அரசியல்வாதிகளின் செல்வாக்கைக் கடந்து, மொழி, அதற்கென்றே வாழும் நல்லறிஞர்களால் குறுக்கீடின்றி வளர்க்கப்பெறவேண்டும். தமிழ்ப்பல்கலைக்கழகம் இவ்வகையில் ஒருநல்லமுயற்சியாகவே அமையும் என்று நம்புகின்றோம். இப்பல்கலைகழகப் பணியில் அரசியல் குறுக்கிடாது என்று முதலமைச்சர் கூறியிருப்பது மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.

## வாழ்க தமிழ்ப் பல்கலைக் கழகம் !

சமயத்தை விட்டுவிட்டுப் பெரிதாக ஆராயத் தமிழில் ஒன்றுமில்லை. மொழியை அதன் உண்மையான போக்கில் ஆராய இடம் தரவேண்டும். குறுகிய சமய எதிர்ப்புநோக்கினை மொழிவளர்ச்சியில் காட்டுதல் அறமாகாது. தமிழ்நாட்டின் இரண்டாயிரம் ஆண்டுக்கால இலக்கிய வளர்ச்சி சமயங்களின் கொடை. இதனைக்கருத்தில் கொண்டு சமய உண்மைகளை மறைக்காது ஆய்ந்து வெளியிடுவதும் இப்பல்கலைக்கழகத்தின் கடனாகும். செலவுகளைப்பெரிதாகக்கருதாது அரசு நவீன ஆய்வு முறைகளை இப்பல்கலைக்கழகம் மேற்கொள்ள அனைத்து உதவிகளையும் செய்யவேண்டுவது இன்றியமையாதது. எதனையும் தொடங்குவது எளிது. போற்றிவளர்த்துப் பயன்கொள்வது அறிவுடைமையாகும். பல்துறை அறிஞர்களும் தாய்மொழி வளர்ச்சிக்கு உரிய பங்காற்ற இது ஒரு நல்லவாய்ப்பு. புதிய பல்கலைக்கழகம் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி வாழ்வாங்குவாழ ஞானசம்பந்தம் நல்வாழ்த்துக்கூறி மகிழ்கிறது.

வாழ்க பல்கலைக் கழகம்

வளர்க தமிழ்க்கலை.

# ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தின் 25 ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து 26½ ஆண்டுகள் அருளாட்சி செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தருமையாதீன வரலாற்றில் பொற்காலங் கண்டவர்கள். ஆதீனத்திற்குட்பட்ட இருபத்தேழு திருக்கோயில்களையும் புதுப்பித்து குடமுழுக்குச் செய்வித்தவர்கள். இமயம் முதல் குமரிவரை அவர்கள் தரிசிக்காத திருத்தலங்களே இல்லை என்னும் அளவிற்கு, தல யாத்திரை செய்தருளியவர்கள். எல்லாவற்றிற்கும் சிகரமாகக் கயிலைமாமலையைத் திருவருள்வலத்தால் தரிசித்த சிறப்புடையவர்கள். அச் சிறப்புக்காரணமாகப் பக்தர்களால் கனகாபிஷேகம் செய்விக்கப்பெற்றுக் "கயிலைக் குருமணி" எனக் கனிவோடு அழைக்கப்பெற்றவர்கள்.

கல்வி – சமய – சமுதாயப் பணிகளுக்குப் பெருங்கொடை வழங்கியவர்கள். அவர்கள் அறக்கொடை பெறாத துறைகளே இல்லை எனும் அளவிற்குக் கொடைவள்ளலாக விளங்கியவர்கள். அருள் வெள்ளமாகவிளங்கிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் திருவருள் அழைப்பின் உணர்வால் ஐம்பத்தெட்டாவது பிறந்தநாளை ஸ்ரீ காசியம்பதியில் கொண்டாடத் திருவுளங் கொண்டு அன்பர்களுடன் ஸ்ரீ காசியம்பதி அடைந்து சிலமணி நேரத்தில் "முத்தையா" என்ற திருநாமத்தை உச்சரித்த வண்ணம் 10—11—1971 காளாஷ்டமி தினத்தில் விசுவேசன் திருவடி நிழலில் இரண்டறக் கலந்தருளினார்கள்.

அவர்கள் வழித் தோன்றலாய்த் தருமையாதீனத்தின் 26–வது குருமணியாய் விளங்கும் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களுக்குத் தருமையாதீனம ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் ஸ்ரீ காசிவிசுவநாதர் திருக்கோயில் விமானவடிவில் குருமூர்த்த ஆலயம்அமைத்து நித்தியநைமித்திக வழிபாடுகளைச் சிறப்பாக நிகழ்த்தி வருகின்றார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பரிபூரணமடைந்த பத்தாவது ஆண்டுக் குருபூஜை நன்னாளாகிய நிகழும் துன்மதி ஆண்டு ஐப்பசித்திங்கள் 4 ஆம் நாள் (20—10—1981) செவ்வாய்க்கிழமை, ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின்வண்ணம் மேற்படி குருமூர்த்த ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகள், திருமுறைப் பாராயணம், சொற்பொழிவுகள் முதலியன நிகழ்ச்சியில் காணும்வண்ணம் சிறப்பாக நடைபெறும். அன்பர்கள் தரிசித்துக் குருவருள் பெற்று உய்வார்களாக.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

**6—9—81 மாயூரம் தேசீய உயர்நிலைப்பள்ளியில் மாயூரம் விசுவ ஹிந்து பரிஷத் நடத்திய விநாயகசதுர்த்தி, கிருஷ்ணஜயந்தி விழாவில்**

வழங்கியருளிய

# ஆசியுரை

மாயூரம் விஸ்வ ஹிந்து பரிஷத்தைச் சேர்ந்த அன்பர்கள் இன்று விநாயக சதுர்த்தியையும், கிருஷ்ண ஜயந்தியையும் ஒருங்கிணைத்து விழாக் கொண்டாடுகின்றனர். விநாயகசதுர்த்தி விழாவையும் கிருஷ்ணஜயந்தி விழாவையும் இணைப்பதன்மூலம் சைவ வைணவ சமயஞ்சார்ந்த மக்களை ஒன்றுபடுத்தும் நோக்குடன் இவ்விழாவை அமைத்திருக்கிறார்கள். சைவ வைணவ சமய மக்களால் பெரிதும் போற்றி வழிபடப்பெறும் இவ்விரு தெய்வ தத்துவங்களைக் குழந்தைகள் அறிதல் பயன்தரும். இங்குப் பள்ளி மாணவர்கள் பலரும் கூடியிருப்பதால் அவர்களுக்குப் பயன்படுமாறு சில கருத்துக்களைச் சொல்லலாம்.

**உணவும் உணர்வும் :**

விநாயகர் சதுர்த்தி இந்தியா முழுவதும் ஒவ்வொருவர்வீட்டிலும் கொண்டாடப்படும் விழா. விநாயகர் என்றவுடன் எல்லோருடைய உள்ளத்திலும் நினைவுவருவது மோதகம். நம் முன்னோர்கள் இன்சுவைப்பண்டங்களை இணைத்தே சமய விழாக்கள் பலவற்றையும் அமைத்துள்ளனர். பழனி என்றவுடன் பஞ்சாமிர்தமும், திருப்பதி என்றவுடன் இலட்டும் ஆவணிமூலம் என்றதும் பிட்டமுதமும் திருவாதிரை என்றதும் களியமுதமும் திருக்கார்த்திகை என்றதும் பொறியும் திருமால்ஆலயம் என்றதும் புளியோதரையும் எல்லோர்நினைவிலும் எளிதில் நினைவுவரும். அதுபோல விநாயக சதுர்த்தி என்றவுடன் கொழுக்கட்டை அல்லது மோதகம், கிருஷ்ணஜயந்தி என்றவுடன் வெல்லச்சீடை முறுக்கு முதலிய தின்பண்டங்கள் எல்லோர்நினைவிலும்வரும். இங்ஙனம் தெய்வ உணர்வால் உயிரையும் சுவை உணவால் உடலையும் வளர்த்துவருவதே நமது சமயம் என்பது நினைவுகூரத்தக்கது.

**விநாயகர் தத்துவம் :**

முதலில் விநாயகரின் உருவ அமைப்புத் தெரிவிக்கும் சில உண்மைகளைக் காண்போம். முதலில் வழிபடும் தெய்வம் விநாயகர். இவர் பெரிய — பேழை வயிற்றை உடையவர். லம்போதரர் என்று வடமொழியில் இவரை அழைப்பர். உலகில் மகப்பேறுற்ற பெண்களைப்பிள்ளையார் வேடம் போட்டாயிற்ரு? என நகையாடுவதைக் காணலாம். தாய் தன் வயிற்றில்மகவை ஏற்றுக் காப்பதுபோல உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளையும் தன்வயிற்றில் அடக்கிக் காப்பவர் என்பதுதான் விநாயகரின் பெருவயிற்றுக்குப் பொருளாகும். இறைவன் வியாபகப்பொருளாகவான் என்பதும் உயிர்கள் அவ்வியாபகப்பொருளில் அடங்கிய வியாப்பியப்பொருள்கள் என்பதும் விநாயகரின் பேழை வயிறு நமக்கு உணர்த்துகின்றது. இதேபோல் கண்ணனின் வரலாறும் ஒரு உண்மையை நமக்கு உணர்த்தும். கண்ணன் மண்ணை உண்டதாகப் பலராமர் சொல்லக் கேட்ட தாய் யசோதை உண்மையா என்றறியக் கண்ணனை வாயைத்திறக்குமாறு கூறினள். வாயைத்திறந்த கண்ணனின் வாயில் உலகமே தெரிந்தது என்ற வரலாறும் இத்தகைய உண்மையை நமக்கு உணர்த்தும்.

**ஐந்தொழில் :**

ஆனைமுகமும், ஒற்றைக் கொம்பும், அமுதகலசம் ஏந்திய கையும் மோதகமும் உடைய விநாயகரது வடிவம், 'ஓம்' என்ற பிரணவ வடிவத்தை நமக்கு உணர்த்துகிறது. விநாயகருக்கு ஐந்துகைகள். இவை அவரியற்றும் ஐந்தொழில்களையும் சுட்டுவன. மேற்புறம் அமைந்த கரங்களில் பாசம், அங்குசம், கீழ்ப்புறம் அமைந்த கைகளில் ஒடிந்த கொம்பு, துதிக்கையில் மோதகம் அல்லது அமுதகலசம் அமைந்திருத்தலைக்காணலாம். ஒடிந்த கொம்பு வைத்திருக்கும் கீழ்க்கரம் படைத்தலையும்' மோதகம் வைத்திருக்கும் துதிக்கை காத்தலையும், மழுவேந்திய வலக்கரம் அழித்தலையும், பாசம்ஏந்திய மேல்இடக்கரம் மறைத்தலையும், கீழே உள்ள இடக்கரம் அருளலையும் குறிக்கும். இவ்வாறுபரமேசுவரனுக்குரிய ஐந்துதொழில்களும் குமாரராகிய விநாயகருக்கும்உண்டு. மேலும் அவனடியார்களுக்கும்உண்டு. கஜமுகாசுரனை ஒடுக்குவதற்காகச் சிவபெருமான் விநாயகரைத் தோற்றுவித்தார் என்பது வரலாறு. கஜமுகாசுரன் சிவபெருமானைவேண்டி வரங்கள் பலவும் பெற்றவன். தேவர்களாலும் மனிதர்களாலும் விலங்குகளாலும் தனக்கு அழிவு ஏற்படக்கூடாது என்ற வரம்பெற்றவன். இத்தனையும் சேர்ந்த ஒன்ருல் தனக்கு அழிவுவரக்கூடாது என்று கேட்கவில்லை. சிவபெருமான் அவனது கொடுஞ்செயல்களை அறிந்து அவனைக் அழிப்பதற்குத் மனித உடலும் யானைத்தலையும் பூதஅடிகளும் உடைய விநாயகரைத் தோற்றுவித்தார். விநாயகர் கஜமுகாசுரனைத் தன்தந்தங்களில் ஒன்றை ஒடித்து அவனை சம்கரித்தார். அவன் மூஷிகமாகமாறி அப்பெருமானின் வாகனமாயினன். விநாயகர் கஜமுகாசுரனை அழித்தபழி தீர வழிபட்டதலம்தான் திருச்செங்காட்டங்குடி. அங்குள்ளகோவிலுக்குக் கணபதீச்சரம் என்பது பெயர்.

விநாயகருக்கு மிக உகந்த நிவேதனம் மோதகம். இது நாம் அப்பெருமானிடம் செலுத்தும் பக்தியின் அடையாளமாகும். இடையீடின்றி இன்சுவைப்பாகால் நிறைந்த மோதகம் நமது இடையீடில்லாத பக்தியை அவரிடம் செலுத்துவதற்கு அறிகுறியாக நிவேதிக்கப்படுகின்றது.

" கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள்தீர்ப்பாம் "

என்ற பரஞ்சோதி முனிவரின் விநாயக வணக்கப்பாடல் ஈண்டு நினைவுகூரத்தக்கது.

தந்தையைப்போலவே விநாயகருக்கு மூன்றுகண்களுண்டு. அவை சூரியன், சந்திரன், அக்னி ஆகியவற்றைக்குறிக்கும். தன்னை வழிபடும் பக்தர்களின் இடையூறுகளை அகற்றி அவர்கட்கு நலம்பலவும் அருளும் இப்பெருமான் குழந்தைகள்முதல் பெரியோர்வரை அனைவராலும் நம் நாட்டில் வழிபடப்படுகிறார்.

## கண்ணன் லீலைகளின் கருத்து :

அடுத்துக் கண்ணபிரானின்வரலாற்றில் அமைந்தஉண்மைகளைச்சிந்திப்போம். விஷ்ணுவின் அவதாரங்களில் இராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் சிறந்தவை. மாயக்கண்ணன் மக்களை ஆட்கொள்வதற்கு எளிய நிலையில் மக்களில் ஒருவராய் வந்துதோன்றி அருள்செய்தநிலையைக் குறிப்பது கிருஷ்ணாவதாரம். துரியோதனாதியர்களின் வஞ்சகச்செயல்களிலிருந்து பாண்டவர்களுக்குத் துணையாய்நின்று அவர்களைக்காத்த அவரது திருவிளையாடலைப் பாரதம் விரித்துப்பேசுகிறது. வசுதேவருக்கும் தேவகிக்கும் மைந்தராய்க் கிருஷ்ணன் அவதரித்தார். ஆயர்பாடியில் நந்தகோபனுக்கும் யசோதைக்கும் புதல்வராய் வளர்ந்தார். அவரது அவதாரத்தைக் கோகுலநந்தனன் என்றும் துவாரகாநாதன் என்றும், பார்த்தசாரதி என்றும் மூன்று நிலைகளில் பிரித்துக்காண்பர்.

கண்ணபிரான் கோகுலத்தில் பதினாறு வயதுவரை வாழ்ந்து பல திருவிளையாடல்கள்புரிந்தார். கண்ணபிரான் வெண்ணெய் திருடி உண்பதில் மிக்கவிருப்புடையவர். பால்போன்ற தூய்மையும் வெண்ணெய் போன்ற மென்மையும் உடைய அடியார்களின் உள்ளங்களைக் கவர்வதில் அவர் விருப்புடையவர் என்பதை இச்செயல் குறிப்பதாகக் கூறுவர். இவ்வாறே அவர் செய்த செயல்களுக்கெல்லாம் உண்மைப்பொருள்கண்டு உயர்வடைய வேண்டுவது மக்கள் கடமை.

துவாரகைநாதனாக அவர் விளங்கியகாலத்தில் இல்வாழ்க்கையின் சிறப்பை உலகிற்கு எடுத்துக்காட்டினார். வேதங்கள் தன்னைத்துதிக்கப் பாண்டவர்பொருட்டாக அவதாரபுருஷராகிய கண்ணபிரான் தூது சென்றதைப் பாராட்டாத நூல்கள் இல்லை.

"படர்ந்தாரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா என்னா நாவென்ன நாவே"

என்கிறது சிலப்பதிகாரம்.

கண்ணன் உத்தம நண்பனுக்கு உதவும் பொருட்டுத் தேரோட்டியாகவும் தோன்றினர். அந்நிலையில் அவர் பார்த்த சாரதி எனப்பெற்றார் போர்க்களத்தில் உறவினர்மேல் கணை தொடுக்க நேரிடுவதை எண்ணி மயங்கிநின்ற அருச்சுனனுக்குக் கீதோபதேசம் செய்து கடமையைச் செய்யும்படித் தூண்டி அவன் நினைப்பை மாற்றினர். 'செயல்புரிவது தான் உனது கடமை. பயனை எதிர்பார்ப்பது உன் குறிக்கோளாக இருத்தல் கூடாது' எனக்கூறி உனது கடமையான போரைச்செய் என்று கண்ணன் அருச்சுனனுக்கு கீதையில் அறிவுரை கூறுகிறார். இது "தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பரடிகள் திருவாக்கோடு ஒப்பிட்டு எண்ணுதற்குரியது. கண்ணனின் பிறவிரிவான வரலாறுகளைப் பாரதம் பாகவதம் ஆகிய நூல்களில் காணலாம்.

நம் நாட்டில் விநாயகரையும் கிருஷ்ணனையும் சைவ வைணவ சமயத்தவர் பெருவிருப்போடு கொண்டாடி வழி படுவர். இவ்விருகடவுளர்களின் விழாக்களை இணைத்துச் சிறப்புறக் கொணடாடும் மாயூரம் விஸ்வஹிந்து பரிஷத் மென்மேலும் வளர்ச்சியுற்றுச் சமயப்பணிகள் பலவற்றை ஆற்றவும் இவ்விழாவில் கலந்துகொள்ளும் அன்பர்கள் நலம் பலபெற்று நீடுவாழவும் நமது ஆன்மார்த்தமூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்தித்து நிறைவு செய்கிறோம்.

---

## தாய்மதம் திரும்பினர்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விஜயத்திற்குப்பின்னர், மாயூரம் கீழையூரில் ஹரிஜனக் காலனியில், முஸ்லிம் மதம் மாறிய இளைஞர்கள் பதின்மர். 7—10—81 சரசுவதிபூசையன்று ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில் சதசண்டிவேள்வி நிறைவில் தருமையாதீனம்வந்து தொண்டர் தீர்த்தத்தில் நீராடி **ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்** திருமுன்னர் தங்கள் தாய்மதமாகிய இந்து மதத்திற்குத் திரும்பினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருநீறளித்துப் புத்தாடைகள் வழங்கி, திருக்கோயில் வழிபாடு செய்வித்து ஆசி அருளினர்கள்.

# தெய்வஒளி போற்றுவோம்

புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.

தீபஒளி ஏற்றுவோம் திருக்களிற்றைப் பராவுவோம்!
பாபம் கரைந்ததென்று பண்பாடி ஆடுவோம்!

கங்கைநீர் ஆடுவோம் சங்கரன்தாள் போற்றுவோம்
மங்கலம் நிறைந்ததென்று மகிழ்ந்துகூத் தாடுவோம்!

புத்தாடை கட்டுவோம் சத்தியின்தாள் வணங்குவோம்
சித்தம் தெளிந்ததென்று சிலிர்த்தெழுந் தாடுவோம்!

மத்தாப்புக் கொளுத்துவோம் மாலவன் தாள் பணிகுவோம்
புத்தொளி பிறந்ததென்று பூரித்து ஆடுவோம்!

தித்திப்பு உண்குவோம் திசைமுகன்தாள் பராவுவோம்!
முத்திவழி திறந்ததென்று முனைந்துகூத் தாடுவோம்!

செந்தமிழே பாடுவோம் செவ்வேள்தாள் வீழ்குவோம்
பந்தங்கள் கழன்றதெனப் பரவசத்தால் ஆடுவோம்!

தாய்நாட்டை வாழ்த்துவோம் தன்னலங்கள் வீழ்த்துவோம்
தருமங்கள் தழைத்ததெனத் தாள்பெயர்த்து ஆடுவோம்

தீபஒளி ஏற்றுவோம்! தெய்வஒளி போற்றுவோம்!
திகட்டாத வாழ்வுக்குப் புதுமெருகு கூட்டுவோம்.

# மாயூரம் — கீழையூர் ஹரிஜனக் காலனிக்குத்

தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

# விஜயம்

கௌரிமாயூரத்தை அடுத்துள்ள கீழையூர் என வழங்கும் திருக்கடைமுடி பாடல் பெற்ற தலம். பெரிய கிராமம். இங்கு வாழும் ஹரிஜனங்களில் சில இளைஞர்கள் முஸ்லீம் மதத்தின ரால் கவரப்பட்டு மதம் மாறிவருகின்றனர் என்ற செய்திகேட்டு மாயூரம் விசுவ ஹிந்து பரிஷத்தைச் சேர்ந்த அன்பர்கள் அக்கிராமத்துக்குச் சென்று ஹரிஜன மக்களைச் சந்தித்து நம் இந்து மதத்தின் சிறப்பை எடுத்துக்கூறி அறிவுரைகள் சொல்லி வந்தனர். திருத்தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களிடம் இச்செய்தியைவிண்ணப்பித்தனர். ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் இச்செய்தியைக்கேட்டு, திருவுளம் மிகவும் வருந்திக் கீழையூர் ஹரிஜன காலனிக்குத் தாங்களே எழுந்தருளினுர்கள்.

27—9—81 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குத் திருக்கடைமுடி என்னும் கீழையூருக்கு எழுந்தருளி அருள்மிகு கடைமுடிநாதரைவழிபட்டு, ஹரிஜனங்கள்வாழும் காலனிக்குச் சென்று, ஹரிஜன மக்கள் வழிபடும் கன்னியம்மன் திருக்கோயிலை வழிபட்டு, ஹரிஜன மக்களால் வரவேற்கப் பெற்ருர்கள். விசுவ ஹிந்து பரிஷத்தின் சார்பில் திரு. சி. ஆர். குஞ்சித பாதம் ஐயர் பி. ஏ., பி. எல். அவர்களும் இந்து முன்னணி சார்பில் திரு. ஜி. துரைக்கண்ணு அவர்களும் கிராம மக்கள் சார்பில் திரு. சோமசுந்தரம் பிள்ளை அவர்களும் ஹரிஜனமக்கள் சார்பில் நாட்டாண்மைக்காரரும் வரவேற்றுப் பேசினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இந்து மதத்தின் சிறப்பினை எடுத்துக்கூறியும் இந்து இளைஞர்கள் முஸ்லீம் மதத்தைச்சேர்வ தால் நாட்டுக்கு விளையும் தீமையை எடுத்து விளக்கியும் அருளுரை ஆற்றினுர்கள். ஹரிஜனங்கள்பலரும்மிக்க உற்சாகத் தோடுகேட்டும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை வரவேற்றும் வணங்கித் திருநீறு பெற்று அணிந்தும் மகிழ்ந்தனர். ஏறத்தாழ ஒரு மணி நேரம் ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்கள் ஆற்றிய அறவுரை ஹரிஜனமக்களின் மனங்களில் நம்நாடு, நம்மொழி, நம்இனம், நம்சமயம், நம்கலாசாரம் என்பவனவற்றை அறிந்து உணர்ந்து திருந்திவாழும் மனமாற்றத்தை உருவாக்குவதாக அமைந்து விளங்கியது.

# திரு அஞ்சைக்களம்

சிவகளை திரு. மு. சுப்பையா B. Lit., (M. A.,)

சிவபிரானைத் தந்தையாகவும், தலைவனாகவும், ஆண்டானாகவும் கொண்டு பாடிப்பரவித் துதித்து இறைவனடி எய்தியவர்கள் முறையே திருஞானசம்பந்தரும், மாணிக்கவாசகரும், திருநாவுக்கரசரும் ஆவார்கள். தன்னைத் தடுத்தாட்கொண்ட இறைவனைத் தோழனாகக்கொண்டு, கொடுத்தபோது மகிழ்ந்து சீராட்டிப்பாடியும்கொடுக்காதபோதும்சீராட்டிப்பாடிம்மறவாது பணிந்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இறைவனுக்கும் சுந்தரருக்கும் இருந்த நட்பின் திண்மையை நாமறிய சுந்தரர் அருளிய சொற்களே சான்று பகரும்.

" மாற்றமேல் ஒன்றுரையீர் வாளா நீரிருந்தீர்
வாழ்விப்பன் என ஆண்டீர் வழியடியேன் உமக்கு
... ... ... ... ... ... ... ... ... ...
தோற்ற மிகு முக்கூற்றில் ஒருகூறுவேண்டும்
தாரீரேல் ஒருபொழுதும் அடியெடுக்க மாட்டேன்."

எனத் தடுத்தாண்ட பிரானையே தட்டிக்கேட்டு அதட்டிப்பாடும் திறன் சுந்தரரின் நட்பின் ஆழத்திற்கு ஒரு சான்று.

" திண்ணென என் உடல் விருத்தி தாரீரேயாகில்
திருமேனி வருத்தவே வளைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா.";

எனப் பாடுவது எதன்பாற்படும்? நட்பின் பாலதன்றோ? அவிநாசியில் " புரைக்காடு சோலைப் புக்கொளியூர் அவிநாசியே கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே" என இறைவனை ஏவிக்கட்டளைபிறப்பிக்கச் சொல்வதும் நட்பின் திண்மைதான். " மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்" எனத் திட்டுகிறார். வெள்ளங்காட்டி வெருட்டிட வஞ்சி வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட கள்ளக் கம்பனை" எனக் கச்சிப் பதிகத்தில் இறைவனின் கள்ளத்தனத்தைச் சுட்டுகிறார், இத்தகைய சுந்தரருக்காக இறைவன் பரவையார் வீட்டிற்குத் தூது செல்கிறார். சங்கிலியாரைத் திருமணத்திற்கு உடன்பட வைக்கிறார். ஊன்று கோல்கொடுத்து " உளோம் போகீர்" என்கிறார். 'நம்தமர் ஊரன்' எனவும் புகழ்ந்துரைக்கிறார், சுந்தரர் மண்ணுலகத்தினின்றும் விண்ணுலகம் வர மத்தயானையருள்புரிந்தார். யானைவந்து அழைத்துச் சென்ற தலம் அஞ்சைக்களம். நாள் ஆடிச் சுவாதி.

திருமுறையில் இடம்பெற்ற இத்திரு அஞ்சைக்களம் திருவஞ்சிக்குளம் எனக் கேரள மக்களால் அழைக்கப்படுகிறது. அஞ்சைக்களம் செல்லப் பல வழிகள் உண்டு. கோவையிலிருந்து ரயில் மூலம் செல்வோர் திருச்சூரில் இறங்கி 40 கிலோ மீட்டர் உந்தூர்தியிற் செல்ல வேண்டும். உப்பங்கழிகளின் வழியே உவகையுடன் செல்ல நினைப்பவர்கள் திருச்சூரில் இறங்கி கருவப்படனம் என்ற துறைக்கு வந்து 10 கிலோமீட்டர் கழியிற் சென்றால் கோயிலின் கரைக்கு வந்தேறலாம். கொச்சி-எர்ணாகுளம் அஞ்சைக்களத்திலிருந்து 75 கிலோமீட்டர் தான்.

அஞ்சைக்களத்திற்கு இரண்டுகற் சுற்றளவிலுள்ள ஊர்கள் சரித்திரப் பிரசித்தமானவை. டச்சுக்காரர்களின் பழைய கோட்டையை யுடைய கோட்டப்புறம் - பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான குலசேகர ஆழ்வார் பிறந்த ஊரான குலசேகர புரம் - மலையாள மாந்திரீகர்களின் மதிப்பிற்குரிய தேவி குரும்ப பகவதி கோயில்கொண்டுள்ள கொடுங்கலூர் கொடுங்கோளூர் பத்தினித்தெய்வம் கண்ணகிக்குப் படிமம் அமைத்த சேரன் செங்குட்டுவன் ஆண்ட வஞ்சித் தலைநகர்.

பரசுராமர் இறைவனைப் பூசனைபுரிந்த தலம். அஞ்சைக் களத்தப்பரை தொழுவார்தம் வந்தவினை நீங்கும். வருகின்ற வல்வினை பொடிபடும். சுந்தரர் காலத்தே இவ்வூரைத் தலைநக ராகக் கொண்டு அரசாண்டவர் சேரமான் பெருமாள் நாயனார். இவரைக் கழறிற்றறிவார் நாயனார் எனப் பெரியபுராணம் பேசு கிறது. சிவபூசையின் முடிவில் அஞ்சைக்களத்துச் சபாபதி தன் பொற்சிலம்பின் ஒலியை எழுப்பிப் பூசனையைஏற்பார். தம்பிரான் தோழரான எம்பிரான் ஒருநாள் சிலம்பொலி எழுப்பாததற்குக் காரணம் " தில்லையில் சுந்தரன் பாடிய பாடலே " எனக் கூறித் தன் தோழரிடம் மலையரசனைத் தோழமை கொள்ளச் செய்தார். புனிதர் சேரமான் பூசை புரிந்தாண்ட இடம் இப்புண்ணிய திரு அஞ்சைக்களமே! இவர் பூசனை புரிந்த சபாபதியின் பீடத்தில் தமிழில் " அஞ்சைக்களத்துச் சபாபதி " என்றெழுதப் பெற்று உள்ளதை இன்றும் காணலாம்.

திருவாலவாயுடைய அண்ணல் "மதிமலி புரிசை மாடக் கூடல்" எனத் தொடங்கும் திருமுகப் பாசுரத்தில் " தன்போல் என்பால் அன்பன், தன்பால் காண்பது கருதிப்போந்தனன், மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே. " எனப் பாண பத்திரனுக்கு உதவிபுரியப் பரிந்துரைசெய்து சீட்டுக்கொடுத்தா ரெனில் சேரமான்பெருமாளின் பெருமையை எழுதத் தேவை யில்லை யல்லவா. இச்சேரமானுக்குச் சுந்தரரின் தோழமை

கிடைக்கும்படிச் செய்ததும் சிவபெருமான்தான். திருப்புகழ் ஆசிரியர் அருணகிரிநாதர் ஆவினன்குடித்திருப்புகழில் "ஆதரம் பயில் ஆரூரர் தோழமைசேர்தல் கொண்டவரோடே முனுளினில் ஆடல்வெம்பரி மீதேறி மாகயிலையிலேகி ஆதியந்த உலாவாசு பாடிய சேரர்" எனச் சிறப்பித்துக் கூறுகிருர். இச்சேரர் திருவாரூர் மும்மணிக்கோவையும் பொன்வண்ணத் தந்தாதியும் பாடியவர்.

இத்திருவஞ்சைக்களத்திற்குச் சுந்தரமூர்த்திநாயனர் இரண்டு முறை எழுந்தருளியுள்ளார். அஞ்சக்களத்தப்பனை தன் சொற்றமிழால் "முடிப்பது கங்கையும்" திங்களும் என்று தொடங்கும் பதிகம் பாடிப் பரவியது முதல்யாத்திரையின் போதுதான். சுந்தரர் மறுமுறை சேரநாடு செல்லும் வழியில் அவிநாசியில் முதலையுண்ட பாலனை எழுப்பினர். சேரமான் பெருமாளுடன் கொடுங்கோளூரில்தங்கியபோது திருவஞ்சைக் களம் சென்று அஞ்சைக்களத்தப்பரை வழிபட்டு, "தலைக்குத் தலைமாலை" என்று துவங்கும் பதிகத்தில் "வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்" என்று முத்தி விண்ணப்பம் செய்துகொண்டார். இதுவே இத்தலத்தின் இரண்டாவது பதிகம் ஆகும். விண்ணப்பம் செய்ததும் திருக்கயிலாயத்திலிருந்து இறைவன் ஆணையினல் இந்திரன், மால், பிரமன் முதல் எழிலார் மிகுதேவரெல்லாம் வந்து இவரை எதிர்கொண்டு கைலாயத்திற்கு அழைத்துச் செல்ல வெள்ளையானையுடன் திருவஞ்சக்களத்துத் திருக்கோயில் முன்வந்துற்றனர். சுந்தரர் கோயிலிலிருந்து வெளிப்போந்தவுடன் தேவர்கள் இறைவனது அருளிப்பாட்டை அறிவிக்க அவர் வணங்கி வெள்ளையானையின் மீது ஏறிக் கயிலாயத்தை நோக்கி ஆகாய வீதிவழியே சென்ருர்.

அப்போது தம்நண்பராகிய சேரமான்பெருமாள் நாயனுரை மனத்தில் நினைத்துச்சென்ருர். சேரர்கோன் இதையுணர்ந்து வெளிப்போந்து தமது குதிரையின் மேலேறி அதற்கு ஐந்தெழுத்தாகிய பஞ்சாட்சர மந்திரோபதேசம் செய்தனர். அதுவும் ஆகாய வழியே சென்று சுந்தரர் ஏறிச் சென்ற யானையை அணுகி வலம்வந்து முன்னே சென்றது. இந்நிலையில் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் அருளப்பெற்ற பதிகமே "தானெனைமுன் படைத்தான்" எனும் பதிகம். [இவைகளை சிவக்கவியாரின் விரிவுரையிற் காணலாம்] இம் மூன்று பதிகங்களையும் கல்லிற் செதுக்கிச் சுந்தரர் சந்நிதியிற் பதிக்கத் தருமையாதீனம் 26 வது குருமகாசந்நிதானம் **சீலத்திரு சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவமிகள்** அருட்கொடை அளித்துள்ளார்கள்.

காஞ்சி தொண்டைமண்டல ஆதீனகர்த்தர் சீலத்திரு ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில் கேரள ஆளுநர் மேதகு திருமதி ஜோதி வேங்கடாசலம் அவர்கள் அதனைத் திறந்துவைக்கும பேறுபெற்றூர்கள்.

தமிழ்நாட்டிற்கு இத்தலத்தை அறிமுகப்படுத்திய பெருமை சிவக்கவிமணி C. K. சுப்பிரமணியமுதலியார் அவர்களைச்சாரும். கொச்சித் திவானுக இருந்த ஸர். R. K. சண்முகஞ்செட்டியார் ஆண்டுதோறும் குருபூசை நடத்தப் பெரிதும் உதவிசெய்தார் கள். ஆடிச்சுவாதித்திருநாள் செலவிற்காகக்கொச்சிஅரசாங்கம் நூறுருபாய் கோயிலுக்குக் கொடுக்கும்படிசெய்ததும். அவரே தான். 1959 ம் ஆண்டு உற்சவ மூர்த்திகளும் வாகனங்களும் கோவைச் சேக்கிழார்திருக்கூட்டத்தினர் திருஅஞ்சைக்களத்தில் செய்துவைத்துள்ளார்கள். ஆடிச்சுவாதியில் அங்குவரும் பக்தர் கட்கு அன்னம்பாலிப்புக் கட்டளை ஒன்றினை திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் ஏற்படுத்தியுள்ளார்கள். சுவாமிகள் மலைநாட்டிற்குத் தலயாத்திரைவருவோர் தங்குவதற்கு இடம் அமைத்து அதில் சேரமான்பெருமாள் நாயனர் – சுந்தரமூர்த்தி சுவாமிகள் நூல் நிலையம் ஏற்படுத்தியுள்ளார்கள். மலைநாட்டிலுள்ள கல்வி நிலையங்களில் கல்விபயிலும் கேரள மாணவ மணிகள் தேவா ரத்தில் தேர்ந்த பயிற்சிபெற ஊக்குவிக்கும் வகையில் தேவாரப் பதிகங்களை மலையாள மொழியில் வெளியிட்டு பரிசுகளை ஏற்படுத்தி ஆடிச்சுவாதியில் இத்தலத்தில் அப்பரிசுகளை வழங்க ஏற்பாடுசெய்துள்ளர்கள் பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராம சாமி அடிகளும், சிரவணபுரம் தவத்திரு சுந்தர சுவாமிகளும், கோவைச் சேக்கிழார்திருக்கூட்டத்துடன் ஆடிச்சுவாதிக்குவந்து வழிபாடாற்றுகின்றனர். தொண்டைமண்டல ஆதீனகர்த்தர் சீலத்திரு குருமகா சந்நிதானம் இக்குருபூசையினைப் பூர்வாசிர மத்திலிருந்து 47 ஆண்டுகளாக முன்னின்று நடத்திவருகிறூர்கள். அன்றையதினம் இக்கோயிலில் தமிழ்நாட்டு நாதசுரம்முழங்கும். தெய்வத் திருமுறை ஒலிக்கும். ஆகமமுறைப்படி அபிடேக ஆராதனைகள் நடக்கும். மலையாளமக்களும் தெரிந்துகொள்வ தற்காக மலையாளத்திலும், தமிழிலும் சொற்பொழிவுகள் நிகழும். சுந்தரரும், சேரமானும் முறையே வெள்ளையானை மீதும் குதிரை மீதும் அமர்ந்து திருவீதியுலாவருவர். நீங்களும் ஆடிச் சுவாதிக்கு ஒரு முறையேனும் அஞ்சைக்களத்துக்குச் சென்று வாருங்கள்.

# திருக்குடவாயில், திருச்சேறைத் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,**

## 1. திருக்குடவாயில்

தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணத்தை அடுத்து, அந்நகரின் தென்கீழ்த் திசையில் விளங்கும் பேரூர்களில் ஒன்று திருக்குடவாயில். மக்கள் வழக்கில் இவ்வூர் குடவாசல் என மருவி வழங்குகிறது. இவ்வூரை மையமாகக்கொண்டு பல சிவதலங்களும் விட்டுணுத்தலங்களும் உள்ளன. கும்பகோணம், திருவாரூர் மற்றும் மாயூரம், கொரடாச்சேரி முதலிய ஊர்களிலிருந்து பேருந்துகளில் இத்திருத்தலத்திற்கு வரலாம். கும்பகோணத்திலிருந்து 15 கி. மீ. திருவாரூரிலிருந்து 16 கி. மீ. கொரடாச்சேரி புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே 10 கி. மீ. கோச்செங்கட் சோழமன்னர் கட்டிய மாடக்கோயில்களில் குடதிசை (மேற்கு) நோக்கியவாயில் உடைய கோயிலைப் பெற்றுள்ளதால் இத்தலம் குடவாயில் எனவும் கோயில் குடவாயிற்கோட்டம் எனவும் வழங்கப்பெறுகிறது. இக்கோயில் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறையினரால் நன்கு பரிபாலிக்கப்படுகிறது.

### தலப்பெருமை :

தேவாரத்திருப்பதிகங்கள் பெற்ற சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 94 ஆவது தலம். கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக்கோயில்களில் மேற்கு நோக்கிய சந்நிதியை உடையது. "கிழக்குக் கடலுக்கு மூன்றுகாதவழி மேற்கிலும், காவிரியாற்றுக்கு ஒருகாதவழி தெற்கிலும், பிரம நதியின் தென்கரையில் அமிருதத் தலமாகக் குடவாயில் விளங்குகிறது. இத்தலத்தின் வாயு மூலையில் இரண்டு நாழிகை தூரத்தில் உள்ள திருச்சேறை என்னும் ஊரில் புகழ்பெற்ற

சைவ வைணவக்கோயில்கள் உள்ளன. அக்னிமூலையில் கரவீரம், பெருவேளூர், தலையாலங்காடு ஆகிய தலங்களும், மேற்கே கடுவாய்க் கரைப்புத்தூர், திருக்கொள்ளம்பூதூர், வடக்கே நாலூர்மயானம் முதலிய தலங்களும் உள்ளன. அமிர்தத்தலமாகிய திருக்குடவாயிலை ஒருவன் நினைத்தாலே சிவனாகிவிடுகிறான். இத்தலத்தை அடைய ஒரு அடி எடுத்து வைத்தாலே வீடு கைகூடி விடுகிறது. இத்தலத்தில் வசிப்பவன் சங்கரனாகி விடுகிறான். சனிப்பிரதோஷத்தில் வழிபடுவோர் சிவசாருப்பியம் (சிவனுடைய வடிவை அடைதல்) பெறுகின்றனர். கார்த்திகைச் சோமவாரத்தில் வழிபடுவோர் சிவபெருமானோடு இரண்டறக் கலக்கின்றனர்" என்கிறது இத்தல மான்மியம்.

சங்ககாலத்தில் தமிழகத்தில் குடவாயில் தனிச்சிறப்புப் பெற்றிருந்தது என்பதை இலக்கியங்களிலும், வரலாறுகளிலும், கல்வெட்டுக்களிலும் நாம் காணலாம்.

## கோயிலமைப்பு :

குடவாயில்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறந்தது. ஊரின் நடுவே பேருந்துச் சாலையை அடுத்து மேற்கு நோக்கி விளங்குகிறது கோயில். எதிரே திருக்குளம். திருக்குளத்தின் கரையில் கோயிலின் வாயிலை நோக்கி ஆதிவிநாயகர் கோயில் உள்ளது. வழிபட்டுக் கோயிலை அடைவோம்.

கோயிலின் வாயிலில் இராஜகோபுரம் அமைப்பதற்கு அடித்தளம் நிறுவிக் கோபுரம் எழுப்பப் பெறாமல் இருக்கிறது. அன்பர்கள் பலரும் புகழ்பெற்ற இக்கோயிலுக்கு இராஜ கோபுரம் அமைப்பதற்குரிய முயற்சியை மேற்கொண்டுவருகின்றனர். இப்போது பஞ்சமூர்த்திகளோடு கட்டைக்கோபுரமாகத் திருவாயில் காட்சிதருகிறது.

கோபுரவாயிலைக்கடந்து உள்ளே சென்றதும் அண்மையில் குடமுழுக்கு நடைபெற்ற கொடிமர விநாயகரை வழிபட்டு வெளிப்பிரகாரத்தை வலமாக வருவோம். வலம் வந்து கொடிமரம் நந்தி பலிபீடங்களைக் கடந்து ஆஸ்தான மண்டபத்தை அடைவோம். இம்மண்டபம் பஞ்சமூர்த்திகளின் அலங்கார மண்டபமாகவும், சமயப் பிரசார மண்டபமாகவும் அம்பாள் கோயிலை இணைத்தும் விளங்குகிறது.

வாயிலில் நின்று அருள்மிகு பெரியநாயகி அம்மையை வழிபட்டு இரண்டாம் கோபுரவாயிலைக் கடந்ததும் முதற்பிரா காரத்தை அடையலாம். மாடக்கோயிலின் அடியில் சந்நிதிக்கு நேரே அருள்மிகு காசி விசுவநாதர் காட்சிதருகிறுர். கிழக்குப் பிராகாரத்தில் கோபுரவாயிலின் வலப்பக்கத்தில் தென்மேற்கில் விநாயகரும், அடுத்துள்ள மண்டபத்தில் சமயாசாரியரும் ஆலாலசுந்தரர் பரவையார் ஆகியோரும் உள்ளனர். இடப் பக்கத்தில் இடும்பன், தண்டபாணி, கலைமகள் ஆகியோர் உள்ளனர். வடமேற்கில் அருணகிரிநாதர் போற்றிப்பரவிய அருள்மிகு குடவாயிற் குமரப்பெருமான் வள்ளி தெய்வயானை அம்மையாரோடு தனிக்கோயிலில் விளங்குகிறுர். எதிரே அழகிய முன் மண்டபம் இக்கோயிலுக்கு அணிசெய்வதைக் காணலாம். வழிபட்டு வலமாக வந்தால் வடக்குப் பிராகா ரத்தில் பழமையான தீம்பலா காட்சி தருகிறது. அடுத்து தலமரம் வாழை உள்ளது.

மேற்குப்பிராகாரத்தில் நவக்கிரகங்கள் சூரியன், சந்திரன், பைரவர், சூதமுனிவர், சப்தமாதர்கள், பாணலிங்கம் முதலிய பல்வேறு இலிங்கங்களைத் தனிமண்டபத்தில் வழிபடலாம். தெற்குப்பிராகாரத்தில் ஆலமர் செல்வராகிய தக்ஷிணமூர்த்தி விளங்குகிறுர். வழிபாட்டு அன்பர்கள் அமர்ந்து ஜபம் செய்ய மண்டபம் உள்ளது. வழிபட்டு மாடக்கோயிலை அடைவோம். அடிவாரத்தில் அமைந்துள்ள சபா மண்டபத்தில் நடராசப் பெருமான் 'என்று வந்தாய்' என்னும் அருட்குறிப்போடு காட்சி தருகிறுர். அவர் எழுந்தருளிய பதுமபீடத்தினடியில் 'களக் காடுடையான் மாலைதாழ்மார்பன்' என்ற தொடர் அமைந்த புடைப்பெழுத்துக்களைக் காணலாம். நடராஜரையும் காசி விசுவநாதரையும் வழிபட்டு வெளியில் வந்து மலைமீது செல்வோம். மலைக்குச்செல்லப் பதினெட்டு படிகள் உள்ளன. மணி மண்டப மலைவாயிலில் கருடன் சிவலிங்கத்தை வழிபடும் காட்சி சுதையுருவில் அமைக்கப் பெற்றுள்ளது. சிவகணங்கள் தவம்புரியும் கோலத்தில் நாற்புறங்களிலும் அமைக்கப்பெற்றுக் கலையழகுடன் வானளாவி விளங்கும் விமானத்தோடு காட்சி தரும் இக்கோயில் திருக்கயிலாய மலைக்குநிகராக விளங்கு கிறது. இத்தலத்தேவாரத்திலும் இக்குறிப்புள்ளது. மகாமண்ட பத்தில் தான்தோன்றீசரையும் சுதை உருவில் விளங்கும் துவார பாலகர்களையும் வழிபட்டு அர்த்தமண்டபத்தை அடைவோம்.

சுவாமி திருச்சந்நிதியில் நின்றபடியே அருளே வடிவாய் விளங்கும் அருள்மிகு கோணேசப்பெருமானை வழிபடுவோம்.

பெரியலிங்கம், சதுரபீடம், கருடன் தன்அலகால் தீண்டி வழிபட்ட சுவடுகளோடு பெருமான் விளங்குகின்றார். திருஞான சம்பந்தப்பெருமானின் உள்ளங்கவர்ந்த இப்பெருமானை அவர் அருளிய தேவாரத் திருப்பாடல்களைஓதி வழிபடுவோம்.

என்றன்உளம் மேவி இருந்தபிரான்
கன்றன்மணி போல்மிட றன்கயிலைக்
குன்றன்குழ கன்குட வாயில்தனில்
நின்றபெருங் கோயில் நிலாயவனே.

என்பது இத்தலத் தேவாரப்பாடல்களில்ஒன்று. வழிபட்டு மலைமீதுள்ள திருச்சுற்றில்வலம்வருவோம். விமானத்தில் பழமையான பல வண்ணச் சுதைச்சிற்பங்கள் உள்ளன, வடபால் ஏகபாதர் திருவுருவம்உள்ளது. அரி அயன் அரன் ஆகியமூவரும் ஒருருவாய் ஒருகாலில் நிற்கும் இச்சிற்பம் காணுதற்குரியது. வலம்வந்து கீழேஇறங்கி அம்பாள் கோயிலை அடைவோம்.

அன்னையின் சந்நிதி தனிச்சிறப்போடு விளங்குகிறது. தெற்குநோக்கிய சந்நிதி. அருள்மிகு பெரியநாயகி வெற்றிதரும் கொற்றவையாகப் பிருகத் துர்க்கையாக வழிபடப் பெறுகிறாள். அம்பிகையே துர்க்கையாக விளங்குவதால் இக்கோயிலில் துர்க்கை இல்லை. அருள்நிறைந்த திருமுக மண்டலத்தோடும் அபயகரத்தோடும் காட்சிதரும் இவ்அம்பிகையின் சந்நிதியில் நின்று வழிபடுவோம். வாரவழி பாட்டுக்கழக அன்பர்களால் திருக்கோயில் மிகத் தூய்மையோடு பரிபாலிக்கப்படுகின்றது. கோணேசர் வாரவழிபாட்டுக்கழகத்தினர் மிக்க ஊக்கத்தோடு வழிபாடுகளும் சமயச்சொற்பொழிவுகளும் உழவாரப்பணிகள், நந்தவனப்பணி ஆகியனவும்செய்து கோயிலை மேலும்விளக்கம் அடையச் செய்து வருகின்றனர். சந்நிதியில் அருட்பாடல்கள் பலவற்றை எழுதியும் வழிபாட்டு முறைகள் தலப்பெருமைகள் ஆகியவற்றைப் பொது இடங்களில் வரைந்தும் போற்றத்தக்க பணிகள் பலவற்றைச் செய்து வருகின்றனர்.

## மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு கோணேசுரர். தலப் புராணப்படி அமிர்த குடத்தின் மேற்பகுதியாகிய கோண வடிவில் இறைவன் விளங்குவதால் இப்பெயர் பெற்றார். கல்வெட்டுகளில் குடவாயிலுடையார் எனக் குறிக்கபடுகிறார். அம்பிகையின் திருப்பெயர் அருள்மிகு பெரியநாயகி. வடமொழியில் பிருகத்துர்க்கை என வழங்கப்படுகிறாள். கலையழகுடைய நடராசர் மற்றும் பஞ்சமூர்த்திகள் தரிசித்தற்குரியவர். தலமரம் வாழை. தீர்த்தம் அமிர்ததீர்த்தம்.

**கோச்செங்கட்சோழமன்னர் :**

இத்திருக்கோயிலைக் கட்டியவர் கோச்செங்கட் சோழ மன்னர். முற்பிறவியில் சிலந்தியாயிருந்து ஆனைக்காவில் திரு வெண்ணாவலின் கீழிருந்த சிவலிங்கத் திருவுருவின்மீது அம்மரத்தின் இலை உதிராவண்ணம் தன் வாய் நூலால் பந்த லிட்டு அன்புசெய்ததால் சோழமன்னராகப் பிறந்த புண்ணிய முடையவர். அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவர் – தாய் தந்தையர் சுபதேவர் கமலாவதி. முற் பிறவியில் தன்பணிக்கு யானை இடையூறு விளைவித்ததால் யானை ஏறுத கோயில்கள் பலவற்றைக் கட்டியவர். திருநறையூரில் திருமாலுக்கும் இவர் மாடக்கோயில் கட்டியுள்ளார். எண்தோள் ஈசர்க்கு எழுபது மாடக்கோயில்களை இம்மன்னர் கட்டினர் என்று திருமங்கை யாழ்வார் பாடுகின்றார்.

**மாடக்கோயில் :**

இறைவன் எழுந்தருளும் கோயில்களை மாடக்கோயில் பெருந்திருக்கோயில், பெருங்கோயில், தான்தோன்றிமாடம், தூங்கானைமாடம், முதலிய பெயர்களால் குறிப்பர் திருநாவுக் கரசர்.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடு எட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக்கோயில்

என்று குறிப்பிடுகிறார். அவற்றுள் மாடக்கோயிற்பதியாக விளங்குவதுகுடவாயில். 'எழில் கொள்மாடக்கோயில்' என்றும், 'குடவாயில் மன்னும் வரையார் பெருங்கோயில் மகிழ்ந்தவனே' என்றும் திருஞானசம்பந்தர் கூறுகிறார். வாயில் என்றமுடிபுடைய பல தலங்களைத் தொகுத்துத் திருநாவுக்கரசர்,

கடுவாயர் தமைநீக்கி என்னை ஆட்கொள்
கண்ணுதலோன் நண்ணுமிடம் அண்ணல் வாயில்
நெடுவாயில் நிறைவயல்சூழ் நெய்தல் வாயில்
நிகழ்முல்லை வாயிலொடு ஞாழல் வாயில்
மடுவார்தென் மதுரைநக ரால வாயில்
மறிகடல்சூழ் புனவாயில் வாடம் நீடு
குடவாயில் குணவாயில் ஆன வெல்லாம்
புகுவாரைக் கொடுவினைகள் கூடா வன்றே.

என்று அருளிச் செய்கிறார்.

**சங்ககாலச்சான்றுகள் :**

சங்ககாலம் என்பது இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு மூற்பட்ட காலம். சங்கநூல்களில் இத்தலமும் கோயிலும் குறிக்கப்படுகிறது. சோழன் கோச்செங்கணன் சேரமான்கணைக் காலிரும் பொறையுடன் போர்புரிந்து வென்று அச்சேரனைக் குடவாயிற்கோட்டத்தே சிறை வைத்தான் என்ற செய்தி புறநானூற்றுள் குறிக்கப்படுகிறது. குடவாயில் சோழர்களின் கருவூலநிலயம் இருந்த இடமாக விளங்கிய செய்தியைக் குடவாயில் கீரத்தனுர் பாடிய அகநானூற்றுப்பாடலால் அறியலாம்.

கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடுதரு நிதியிலும் செறிய
அருங்கடிப் படுத்துவள் அறனில் யாயே

என்பது அவர்பாடிய பாடல்தொடர்.

குடவாயில் கீரத்தனுர் இவ்வூரில் தோன்றிய பெரும் புலவர். அகநானூற்றுப்பாடலில் தலைவியின் எழிலுக்குக் குடவாயிலை உவமையாகக் கூறுவதையும் காணலாம்.

அருஅயணர்ப், பழம்பல் நெல்லின் பல்குடிப்பரவைப்
பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளைத்
தண்குட வாயிலன் னோள்

எனக் கூறுகிருர். அவர் தலைவியின் கைவிரல்களுக்குக் குடவாயிலில் மலர்ந்த நீலமலரை உவமையாகக் கூறுவதை நற்றிணையில் காணலாம்,

தேர்வண் சோழர் குடந்தை வாயில்
மாரியங் கிடங்கின் ஈரிய மலர்ந்த
பெயலுறு நீலம் போன்றன விரலே.

என்பது பாடல்.

**கல்வெட்டுச்சான்று :**

கி. பி. 9 – 13 ஆம் நூற்ருண்டுகட்கு இடைப்பட்ட சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள் மூன்று இராஜ கோபுர வாயிலிலும், இரண்டாம் கோபுர வாயிலிலும் காணப்படுகின்றன. மூன்ரும்

குலோத்துங்கன் தன் காலத்தில் (கி. பி 1193) "குலோத்துங்க சோழ வளநாடு" என்ற பெயருடன் இவ்வூர் மிகுந்த ஆக்கம் பெற்றுத் திகழ்ந்துள்ளது என்பதனை அறிகிறோம்.

இம் மாடக் கோயில் விமானத்தின் தென்புறச் சுவரில் ஆலமர் செல்வன் அமர்ந்துள்ள கோஷ்டத்தின் கீழ்புறக் கல்வெட்டு ஒன்று "ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் மதுரை கொண்டு பாண்டியன் முடித்தலை கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 15 ஆவது (கி. பி. 1193) 130 னுள் குடவாயில் உடையார் பெருந்திருக் கோயிலுடையார் பெரியநாச்சியார்க்கு திரு ஆபரணம் பண்ண குற்றால முடையான் திருச்சிற்றம்பல முடையார் ஆன காராணை விழுப்பரையர் இட்ட எட்டெழுகால் மாறி பொன் பதின் கழஞ்சு."

இக்கல்வெட்டொன்றே இத்திருக் கோயிலிலுள்ள முழுமையான – இத்திருக் கோயிலுடன் தொடர்புடைய கல்வெட்டாகும். இக்கல்வெட்டால், மூன்றாம் குலோத்துங்கனின் 15 ஆவது ஆட்சியாண்டில் (கி. பி. 1193) குடவாயில் உடையார் என்ற இறைவனின் பெருந்திருக்கோயிலில் உள்ள பெரியநாச்சியாருக்கு ஆபரணங்கள் செய்வதற்காகக் குற்றாலம் என்ற ஊரைச்சேர்ந்த திருச்சிற்றம்பல முடையான் என்பவன் அளித்த 10 கழஞ்சு பொன் பற்றிக் கூறுகிறது. மேலும், இக்கல்வெட்டால் கோயில் பெயர்; "பெருந்திருக்கோயில்" எனவும், இறைவி பெயர்; பெரியநாச்சியார் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது பழம் பெருமைக்குகந்த கல்வெட்டுச் சான்றாகும்.

## புராணச் சிறப்பு :

இறைவன் உலக அழிவின் போது (யுகாந்தப்பிரளய காலத்தில்) உயிர்களனைத்தையும் அமிர்த குடத்திலிட்டு – குடத்தின் வாயில் சிவலிங்ககமாயிருந்து காத்தமையால் குட வாயில் கோணேச மூர்த்தியாகவும், மீண்டும் உலகைப் படைப்பின் போது குடத்தை உடைக்க, உடைந்த குடத்தின் வாய் பாகம் இங்கு அமிர்தத்துடன் விழ குடவாயில் – எனும் தலமாகவும், அமிர்தம் வழிந்து தேங்கிய இடம் அமிர்த தீர்த்தத் திருக் குளமாகவும் திகழ்கின்றன.

இவை தவிர இத்தலத்திற்குக் கதலிவனம், கோணத்தானம், வன்மீகாசலம் என்ற பெயர்களும் உண்டு. கருடன் பூசித்து அமுதம் பெற்றுத் தானும் தன் தாய் விநதையும் சாபம் நீங்கப்

பெற்றுத், திருக்கோயில் அமைத்து வழிபட்டதாகவும், திரண பிந்து எனும் முனிவர்க்குக் குடத்தின் வாயிலில் சிவபெருமான் வெளிப்பட்டு அவரது குட்டரோகத்தைத் தீர்த்ததாகவும், ஜடாயு, அக்னி, சூதமகரிஷி, பிருகு முனிவர் போன்ற அருளாளர் பலரும் வழிபட்டு அருள் பெற்றதாகவும், குடவாயில் தல புராணத்தே எடுத்தியம்பப்பட்டுள்ளன.

இத்தலத்திற்குத்தலபுராணமும்வித்துவான்,திரு.மு.இரத்தின தேசிகர் அவர்கள் புலவர் கோ. சுப்பிரமணியம், திரு. பாலசுப்பிர மணியம் முதலியோர் எழுதிய நூல்களும் கட்டுரைகளும் தோத்திரங்களும் உள்ளன.

## 2. திருச்சேறை

இத்தலம் கும்பகோணத்துக்குத் தென்கிழக்கில் 15 கி.மீ தூரத்திலுள்ளது. நாச்சியார் கோயிலிலிருந்து 5 கி. மீ. திரு அரிசிற்கரைப்புத்தூர், திருநறையூர், நாலூர்மயானம். குடவாயில் ஆகியன அருகிலுள்ள தலங்கள். திருச்சேறையில் புகழ்பெற்ற சாரநாதப்பெருமாள் என வழங்கும் திருமால் கோயில் உள்ளது. மங்களாசாசனம் பெற்றது. திருமால் கோயிலோடு இத்திருக் கோயிலும் இணைக்கப்பட்டுத் தமிழ்நாடு இந்துசமய அறநிலயத் துறையினரால் பரிபாலிக்கப்படுகிறது. சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலங்களில் 95 வதுதலம்.

கும்பகோணம், திருவாரூர், பூந்தோட்டம், ஆகிய ஊர்களில் இருந்து பேருந்துகளில் வரலாம். கும்பகோணத்திலிருந்து புறநகரப் பேருந்துகளும் உள்ளன.

### தலப்பெருமை :

இவ்வூர், ஆற்றூர் ஆறை என மருவி வழங்குதல் போலச் சேற்றூர் என்ற பெயர் சேறை என வழங்கியது ஆகலாம். தேவாரப்பாடல்களில் செந்நெல்லார் வயற்சேறை எனவும், வயல்களால் சூழப்பெற்ற வளநகர் எனவும் இத்தலம் குறிக்கப் படுதலாலும், இதனைத்தெளியலாம். மார்க்கண்டேயர், தௌமிய முனிவர் வழிபட்டதலம்.

### கோயிலமைப்பு :

திருச்சேறை பேரூர்களில் ஒன்று. திருமால் கோயிலுக்குக் கிழக்கே செந்நெறியப்பர் கோயில் உள்ளது. நான்கு வீதிகளை

உடையது. உடையார்கோயில் என வழங்கப்படுகிறது. கிழக்கு நோக்கிய சந்நிதி. இராஜ கோபுரம்இல்லை. எதிரே ஞானவாவி என்னும் தீர்த்தம் உள்ளது. கட்டைக் கோபுரவாயிலைக் கடந்த உடன் வெளிப்பிராகாரம், கொடிமரம் நந்தி பலிபீடங்கள் உள்ளன. வலப்பக்கம் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளும் அலங்கார மண்டபம் உள்ளது. வலம்வந்து மூன்று நிலைகளோடு கூடிய இரண்டாம் கோபுர வாயிலைக் கடந்து கோயிலுக்குள் செல்வோம். முதற்பிரகாரத்தை வலம் வரும்போது கன்னி மூலையில் விநாயகரைத்தரிசிக்கலாம். அடுத்துள்ள மண்டபத்தில் மார்க்கண்டேயர் வழிபட்ட சிவலிங்கம் அம்பாள் திரு உருவங்கள் உள்ளன. அடுத்த மண்டபத்தில் சப்தமாதர்கள் சமய குரவர்கள் உள்ளனர். அடுத்து முருகப்பெருமான் பாலசுப்பிரமணியராகக் காட்சிதருகிறார். அடுத்து கஜலக்ஷ்மியும் ஜேஷ்டாதேவியும் உள்ளனர்.

கருப்பக்கிருகத்தைச் சுற்றிச் சிறிய மண்டபம் தொடர்ந்து உள்ளது. கோஷ்டங்களில் தெற்கே விநாயகர், நடராஜா, இடபாருடர், தக்ஷிணாமூர்த்தி, வடக்கே காலபைரவர், மூன்று துர்க்கைகள் உள்ளனர். ஈசானத்திசையில் நடராஜர், கிழக்கில் சூரியன் சனிபகவான் உள்ளனர்.

சுவாமிகோயில் ஆஸ்தான மண்டபம், மகாமண்டபம், ஸ்நபனமண்டபம், அர்த்தமண்டபம், கர்ப்பக்கிருகம் ஆகிய அமைப்புக்களோடு உள்ளது. ஸ்நபனமண்டப வாயிலில் துவாரபாலகர், துவாரவிநாயகர் உள்ளனர். சுவாமிக்கு எதிரே நந்திபலிபீடங்கள் உள்ளன.

செந்நெறியப்பர் அழகிய வட்ட வடிவான ஆவுடையாரில் விளங்குகின்றார். பாணம் பெரியது. நம் உள்ளங்களை ஈர்க்கும் தெய்விக ஆற்றலுடைய திருவுருவம். வழிபட்டு இத்தலத் தேவாரப்பாடலை ஓதி இன்புறலாம்.

பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கியிங் இன்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே.

என்பது திருநாவுக்கரசர் அருளியதேவாரம். வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடைவோம். அம்பிகை கோயில் சுவாமிகோயிலின் இடப்பாகத்தே வெளிப்பிரகாரத்தில் உள்ளது. கிழக்குநோக்கிய சந்நிதி, அழகிய முன்மண்டபத்தோடு விளங்குகிறது. அருள்மிகு

ஞானவல்லியம்மை என்பது அம்மையின் திருப்பெயர். வழிபடுவோம்; நலம் பெறுவோம்.

## மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு செந்நெறியப்பர்-சாரபரமேசுவரர் என வழங்கப்பெறுகிறுர். அம்பிகையின்திருப்பெயர் அருள்மிகு ஞானவல்லியம்மை. தலமரம் – மாவிலங்கை. தீர்த்தம் – மார்க்கண்ட தீர்த்தம்.

## திருப்பதிகச் சிறப்பு :

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்கள் இரண்டும் ஆகமுன்று திருப்பதிகங்கள் உள்ளன. ஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் வழிமொழித் திருவிராகம் எனப்படும். இது குற்றெழுத்துக்களே மிகுதியாகவரப் பாடப்பட்ட சந்தத்திருப் பதிகமாகும். திருநாவுக்கரசர் அருளிய திருநேரிசைத்திருப்பதிகம் ஒவ்வொருபாடலும் ஒவ்வொரு புராணவரலாறுகளைக் கொண்டு விளங்குகிறது. திருக்குறுந்தொகை இம்மை மறுமைப் பயன் களைக் கூறுகிறது. சேறைச் செந்நெறியீசர் தம் சிறப்பை எடுத்துக்கூறி நம்மை அவ்விறைவன்பால் ஆற்றுப்படுத்தும் இத்திருப்பதிகங்கள் சிந்தனைக்கு விருந்தாய் நம் உயிருக்கு மருந்தாய் உதவுவன.

## கல்வெட்டு :

இவ்வூர்க் கோயிலில் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவரின் ஐந்தாமாண்டிலும் 27 – ஆம் ஆண்டிலும் பொறிக்கப்பெற்ற இரண்டு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் இறைவரின் திருப்பெயர் திருச்செந்நெறி உடையார் என்று குறிக்கப்பெற்றுள்ளது. இறைவர் சித்திரை மாதத்துச் சுவாதி நட்சத்திரத்தில் இராச நாராயணப் பேராற்றுக்குத் தீர்த்தங்கொடுத்தற் பொருட்டு எழுந்தருளுவது உண்டு. இராசசுந்தரச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் நிவந்தம் அளித்திருந்தனர். அச்சபையாரே இக்கோயிலில் உள்ள உமாமகேஸ்வரதேவர்க்கும் இறையிலியாக நிலநிவந்தம் அளித்திருந்தனர்.

கட்டுரை எண். 20.

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M. A., B. Lit.,
D. P. P. A., D. U. N., I. U;

**வெளிநின்றநின் திருமேனியைப்பார்த்தென் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டதில்லை; கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றதென்ன திருவுள்ளமோ?
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவிஉறைபவளே! 19**

**அ. ஒளி நின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே!**

(1) ஒளிநிறைந்து விளங்குகின்ற ஒன்பதுகோணங்களிலும் எழுந்தருளி வீற்றிருக்கும் அபிராமியே என அழைக்கின்றார்.

(2) அம்பிகை வழிபாட்டில் யந்திரபூஜை முறையில் வழிபடுவது சிறப்பானதும், சக்திமிக்கதும் ஆகும். சிவகோணங்கள் நான்கும் சக்தி கோணங்கள் ஐந்தும் ஆக ஒன்பது கோணங்கள் இணைந்து ஒன்றையொன்று வெட்டுவதால் மொத்தம் நாற்பத்துமூன்று கோணங்கள் உண்டாகின்றன. அதன் நடுவணையில் 'பிந்து' மண்டலம் என்ற இடத்தில் அம்பிகை எழுந்தருளுகிறாள். எல்லாச் சக்கரங்களையும் விட (யந்திரங்களையும் விட) அன்னை உறையும் ஸ்ரீசக்கரம் தலையாயது. எனவே அதனை 'சக்ர ராஜம்' (சக்கரங்களுக்குள் அரசன்) எனப் போற்றுகின்றனர். ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதால் உண்டாகும் இந்த ஸ்ரீசக்கரத்தில் அனைத்துத் தத்துவங்களும் அடக்கம். குறிப்பாகக் கூறின் இன்றைய அணுசக்தி விஞ்ஞானமும் அடக்கம். அவற்றினைச் சுருக்கமாவும் தொகுத்தும் ஆராய்வோம்.

(3) ஒன்பது முக்கோணங்களில் கீழ்நோக்கிய முக்கோணகள் ஐந்தும், சக்தி கோணங்கள் எனப்படும். மேல் நோக்கிய முக்கோணங்கள் நான்கும் சிவகோணங்கள் எனப்

படும். இவை இணைந்து வெட்டுவதால் உருவாகும் 43 கோணங்களைக் கொண்ட ஸ்ரீசக்கரம் சிவசக்தி ஐக்ய பாவத்தையுணர்த்தும் யந்திரமாகும்.

(4) வழிபடுவோரின் குறிக்கோளும் எண்ணங்களும் உயர்ந்தனவாகவே இருத்தல்வேண்டும் என்பதனை மேல்நோக்கியகோணங்கள்குறிக்கின்றன. அவ்வாறுவழிபடுவோரின் எண்ணமும் குறிக்கோளும் உயர்ந்தனவாயின் இறைவி கீழ்நோக்கி இறங்கிவந்து அருள் பாலிக்கிருள் என்பதனைக் கீழ்நோக்கிய கோணங்கள் குறிக்கின்றன.

(5) கடவுட்தத்துவம் எங்கும் வியாபித்து இருக்கிறது. அவ்வாறே நமது உடலிலும் வியாபித்திருக்கிறது. அதனையே "அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு" என மேலோர் கூறினர். நமது உடலினைப் 'பிண்டாண்டம்' என்றும் ஏனைய உலகனைத்தையும் 'ப்ரம்மாண்டம்' என்றும் கூறுவர். அகில உலகங்களிலும் அன்னை எழுந்தருளியிருக்கிருள் என்றபாவனையில் ஸ்ரீசக்கர வழிபாடு நடத்துவது ஒருமுறையாகும்.

நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தினையும் சக்தி கோணங்களாகவும், மாயை, சுத்தவித்தை, மகேச்வரன், சதாசிவன் ஆகிய நான்குதத்துவங்களையும் சிவகோணங்களாகவும் கொண்டு, அதனை வரிவடிவில் குறிக்கும் தெய்வீகச் சின்னமாக ஸ்ரீசக்கரத்தினைக் கொண்டு வழிபடுபவர். அதாவது, மேற்கூறிய ஒன்பது தத்துவங்களின் வடிவே ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் ஆகும். அவற்றில் சக்தி வியாபகமாகவிருக்கிருள் என்பது கருத்து.

(6) நமது உடலினையே அம்பிகை எழுந்தருளும் ஸ்ரீசக்கரமாகப் பாவித்து வழிபடும் முறையினை 'பாவனேபநிஷத்' என்னும் உபநிடதம் விளக்குகிறது.

தோல், இரத்தம், மாமிசம், கொழுப்பு, எலும்பு ஆகிய ஐந்தினையும் சிவகோணங்களாகக் கருதவேண்டும். மஜ்ஜை, (எலும்பின் உள்ளே உள்ள சத்து) சுக்லம், பிராணன், ஜீவன் ஆகிய நான்கினையும் சிவகோணங்களாகக் கருதுதல்வேண்டும். இவ்வொன்பது தாதுக்கள் அடங்கிய நம் உடலினை ஸ்ரீசக்கரமாகப் பாவித்து இதயமாகிய பிந்துஸ்தானத்தில் இறைவியைப் பூஜித்தலே பிண்டாண்ட முறையாகும். "நான் யந்திரம், நீ யந்திரத்தில் எழுந்தருளும் தெய்வம்" எனக்கூறி இராமகிருஷ்ண பரமஹம்சர் இங்ஙனம் இறைவியினை சரீரமாகிய ஒன்பான்

கோணத்தில் எழுந்தருளச் செய்து வழிபட்டார். அபிராமி பட்டரும் அதே முறையில் 'பாவனோபநிஷத்' என்னும் வேதக் கொழுந்துகாட்டிய முறையிலேயே அன்னையினை உள்ளே வழிபட்டார். வெளியேமட்டும் வழிபட்ட மற்றவர்களுக்கு அவர் 'பித்தர்' போலக்காணப்பட்டார். இராமகிருஷ்ணரையும் முதலில் மக்கள் பித்தரெனக் கருதினர் என்பதும் குறிப்பிடத் தக்கது. இவ்வாறு சிவசக்தி எழுந்தருளும் நவகோணமாக தமது உடலினை எண்ணிய அடியார்களையே திருமூலரும் "நடமாடக் கோயில் நம்பர்" எனப் போற்றினர். அண்டங்கள் முழுதும எழுந்தருளுபவளே ஒன்பது தாதுக்களாலான நமது உடலிலும் உறைகிருள் என்பது திரண்டகருத்து.

(7) துருவாசமகரிஷி எழுதிய 'ஸ்ரீநகர விமர்சனம்' அல்லது 'லலிதா ஸ்தவ ரத்னம்' என்ற நூலில் அம்பிகை ஸ்ரீநகரத்தில் ஸ்ரீசக்ரத்திடை எழுந்தருளியிருப்பதை வருணிக்கிருர். ஒன்பது கோணங்கள் இணைந்து வெட்டுவதால் உருவாகும் சக்கரம் அல்லது யந்திரம் ஸ்ரீசக்கரம் எனப்படுகிறது. அதுவே, பிம்பமாக – சிற்பமாக உருவாகும்பொழுது 'மேரு' என அழைக்கப்படும்.

(8) பண்டாசுர யுத்தத்தின் பொழுதும் அன்னை ஒன்பது கோணங்களைக் குறிக்கும் ஒன்பது தட்டுக்கள்கொண்ட தேரின் மீது எழுந்தருளி வந்தாள். "சக்ர ராஜ ரதாருட சர்வாயுத பரிஷ்க்ருதா" – ஸ்ரீசக்கரத் தேரினில் எல்லா ஆயுதங்களும் புடைசூழ விளங்குபவள் என சகஸ்ரநாமம் கூறும். அதாவது நமது சரீர மென்னும் நவதாதுக்களால் உருவான தேரில் எழுந்தருளிவந்து தீக்குணங்களாகிய பண்டாசுரனை அழிக்கிருள் என்பதே இதன் உட்கருத்து.

"ஸ்ரீசக்ர ராஜ நிலயா" – ஸ்ரீசக்ரமாகிய ஒன்பான் கோணத் தில் உறைபவள்" எனவும் சகஸ்ரநாமம் புகழும்.

(9) ஒளிநின்றகோணங்கள் ஒன்பதும் என்பதனை ஒன்பது ஆபரணங்கள் எனப் பொருள் கொண்டாலும் பொருந்தும். ஏனெனில், நவ ஆவரணங்களிலும் அன்னையே ஒன்பதுபெயர் களுடன் ஆங்காங்கே எழுந்தருளுகிருள்.

(10) அன்னைக்குரிய யந்திரமாகிய ஸ்ரீசக்கரம் அணுசக்தி விஞ்ஞானத்தின் வரைபடமே எனலாம். அணுவுக்குள் 'எலக்ட்ரான்'கள் என்னும் நுண்கூறுகள் அலைஅலையாய் சுழன்றுகொண்டேயிருக்கின்றன. 'ப்ரோட்டான்'கள் குறுக்கும்

நெடுக்குமாகச் சுழன்றுகொண்டிருக்கின்றன. நடுவில் உட்கரு (Nucleus) அமைகிறது. அந்த உட்கரு அல்லது Nucleus என்ற இடத்திலிருந்தே 'நியூகிளியார் எனர்ஜி' அல்லது சத்தி கிடைக்கிறது என்பது தற்கால விஞ்ஞானம்.

ஸ்ரீசக்கரத்தில் கோணங்கள் குறுக்கு நெடுக்காக இயங்கும் 'ப்ரோட்டான்'களைக் குறிக்கின்றன. வெளியில் வரையப்படும் தாமரைஇதழ்கள்போன்ற வட்டங்கள் அலைஅலையாய்ச் சுழன்று கொண்டிருக்கும் 'எலக்ட்ரான்'களைக் குறிக்கின்றன. நடுவில் உள்ள 'பிந்து' என்னும் புள்ளி 'நியூகிளியசை' குறிக்கிறது. அப் பிந்துவே சத்தியின்இருப்பிடம்என்கிறது நமதுமெய்ஞ்ஞான மும். ஆகவே அணுசக்தி அறிவியலும் அன்னையின்மெய்ஞ்ஞான மும் வேறல்ல.

இவை ஒளிநின்ற கோணங்கள் பற்றிய பொதுவான செய்தி களின் சுருக்கம். விரிவான விளக்கங்கள் வேண்வோர் சௌந்தரியலகரி உரை, சகஸ்ரநாம உரை, ஸ்ரீசக்ரநாயகிகள், லலிதாஸ்தவரத்தினம் போன்ற நூல்களில் காணலாம். இரகசிய அர்த்தங்களும் உபாஸனை முறைகளும் தக்க குருவின் மூலம் அறியவேண்டியவையாகும்.

## ஆ. வெளிநின்ற நின் ......... கரைகண்டதில்லை

(1) வெளிப்பட்டு நின்ற நினது அர்ச்சாமூர்த்தத் திருமேனி யினைக் கண்ட எனது கண்ணும், நெஞ்சும் கரையில்லா ஆனந்த வெள்ளத்தில் திளைக்கின்றன.

(2) 'சூட்சுமதரம்' என்ற நிலையில் நவகோணத்தில் எழுந்தருளும் அம்பிகை அர்ச்சாமூர்த்தவடிவில் (விக்ரஹ வடிவில்) காட்சிதரும் பொழுது ஸ்தூலவடிவாய் விளங்குகிறாள். அந்த ஸ்தூலவடிவக் காட்சியினைப் புறக்கண்ணான விழியாலும், அகக்கண்ணான நெஞ்சாலும் காணும்பொழுது ஆனந்தக்களிப்பு ஏற்படுகிறது. அக்களிப்பு கரையில்லா வெள்ளமாய்ப் பெருகு கிறது. அத்தெய்வீகக் களிப்புநிலை, பெரும் ஞானிகளும் "மனித்தப்பிறவியும் வேண்டுவதே" எனவும் "இந்திரலோகம் ஆளும் அச்சுவையும் வேண்டேன்" எனவும் கூறுமளவிற்குச் சிறந்த நிலையாகும்.

(3) காளிதேவியின் தரிசன மாத்திரத்தில் இராமகிருஷ்ண பரமஹம்சரும் ஆனந்தக்கூத்திடுவார். பராசக்தியின் காட்சியினை

விழியாலும் நெஞ்சாலும் கண்ட பாரதியாரும் அவ்வப்பொழுது "ஜெய் பவானி! ஜெய்பராசக்தி!" எனக்கூறி ஆனந்த பரவசத்தில் நடமிடுவார் என அவரது வரலாற்றிலிருந்து அறிகிறோம்.

(4) விழியும் நெஞ்சும் இறைவியிடம் ஈடுபட்டநிலையிலேயே அபிராமிபட்டர் மதுவுண்டு மயங்கியவர்போல் காணப்பட்டார். அதனையே அவ்வூரார் தவறாகப் புரிந்துக்கொண்டனர்.

(5) ஒளிநின்ற ஒன்பது கோணத்தில் ஒன்பதாவது ஆவரணத்திற்கு 'சர்வானந்த மயச் சக்கரம்' என்றே பெயர். அதாவது அந்தநிலையில் அனைத்துமே களிப்புமயம். சூட்சுமதரமான நவகோணத்தில் ஆனந்தமயமானவள், ஸ்தூலமான அர்ச்சா மூர்த்தக் காட்சிதரும் பொழுதும் அதே களிப்பு வெள்ளத்தைத் தருகிறாள்.

## இ. கருத்தினுள்ளே ......... என்ன திருவுள்ளமோ?

(1) அவ்வாறே அத்தரிசனதின் காரணமாகச் சிந்தையில் தெளிவான ஞானம் திகழ்கின்றது. அதுவும் உன்றன் திருவருள் அல்லவா ?

(2) ஆனந்தக் களிப்பூட்டும் அதேதரிசனம் சிந்தைத் தெளிவையும் ஞானத்தையும் அருளுகிறது. அவளையறிவதே உண்மையான ஞானம். அதுவே தெளிவான ஞானம். அது அவளது அடியாருக்குக் கிட்டுகிறது.

(3) 'ஜ்ஞானதா' – ஞானத்தை அளிப்பவள் "ஜ்ஞான விக்ரஹா" – ஞானஉருவினள் என சகஸ்ரநாமம் போற்றுகிறது. அவளது அடியவரது மனம் தெளிந்து தூய நீரோடைபோல் ஆகிவிடுகிறது. அவள் அதில் நீந்திவிளையாடும் அன்னப் பேடையாய் ஆகிவிடுகிறாள். இதனை சகஸ்ரநாமம் "பக்த மானஸ ஹம்ஸிகா" – "பக்தரின் மனமெனும் நீரோடையில் வாழும் அன்னப்பேடு" என வருணிக்கிறது.

(4) பாஸ்கரராயர் போன்ற அவளது அடியவர் ஞானத் தெளிவினால் நுணுக்கமான மந்திர சாஸ்த்திரங்களையும் தெளிவாக விளக்குவதைக் காண்கிறோம். அவளது பக்தர் இராமகிருஷ்ணபரமஹம்சர் அரும் பெரும் தத்துவங்களைச் சிறுவரும் பாமரரும் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் மிகத் தெளிவாக விளக்கியிருப்பதனை அவரது உபதேமொழிகளைக் கற்பவர் அறிவர்.

(5) பொதுவாக மற்ற போகப் பொருள் மூலமாகக் கிடைக்கும் ஆனந்தநிலை மனிதனை மயக்குகிறது. மனங்குழம்பி, செருக்கடைந்து செய்யாதன செய்யக் காரணமும் ஆகிறது. ஆனால் இறையனுபவத்தால் ஏற்படும் களிப்பு வெள்ளமோ தெளிநின்ற ஞானத்தைத் திகழச் செய்கிறது. "என்ன திருவுள்ளமோ?" என்ற வினவும் இதனைக்குறித்தே எழுந்த தாகும். "பிற போகப்பொருள்கள் மூலம் எய்தும் களிப்பு ஒருவனைமயக்கிக் குழப்ப, உனது தரிசனத்தால் ஏற்படும் களிப்போ தெளிநின்றஞானம் திகழச்செய்வது என்ன வியப்பு" என்னும் பொருள் தோன்ற நிற்கிறது 'என்ன திருவுளமோ?' என்ற வினா.

(6) களிநின்ற வெள்ளம், தெளிநின்ற ஞானம் இவ் விரண்டும் தரும் இயல்பினைக் கம்பனின் சரஸ்வதியந்தாதிப் பாடலும் குறிப்பிடுகிறது.

"புரிகின்ற சிந்தையினூடே புகுந்து புகுந்து இருளை
அரிகின்ற தாய்கின்ற எல்லா அறிவினரும் பொருளைத்
தெரிகின்ற இன்பம் கனிந்தூறி நெஞ்சம் தெளிந்து முற்ற
விரிகின்றது எண்ணெண் கலைமான் உணர்த்தியவேதமுமே"

— சரசுவதியந்தாதி.

அம்பிகையின் ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதினையும் பற்றிக் குறிப்பிடும் சௌந்தரியலகரி பாராயண பலன் பின் வருமாறு கூறப்படுகிறது.

"நாற்பத்துமூன்று கோணங்கள் மற்றும் 'பிந்து' ஆக நாற்பத்து நான்கினுக்கும் ஏற்ப நாற்பத்து நான்காயிரம் முறை பாராயணம்செய்து, முறையான, குருமூலமான உபதேசத்துடன் ஸ்ரீசக்கர பூஜை செய்பவர்களுக்கு அன்னையின் உண்மையான ஸ்வரூப தரிசனம் கிட்டும்."

அபிராமி அந்தாதியின் இப்பாடலுக்கும் அதே பாராயண பலன் உண்டு.

குருமுகமான உபதேசம் பெற்று ஸ்ரீசக்ர பூஜை செய்ய வியலாத அன்பர்களுக்கும் மனக்கலக்கங்கள் நீங்கி உள்ளத் தெளிவு ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

# கவிதை அலைகள்

பேராசிரியர், திரு. வ. பெருமாள்
எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எஸ்., எப். எப். ஐ.,

( மலர் 40. இதழ் 10, பக்கம் 447 இன் தொடர்ச்சி )

**வல்லொலி :**

மக்கள் வெகுளி, வீரம் முதலிய வன்மையான உணர்ச்சி களுடன் இருக்கும்போது வெளிப்படுகின்ற பேச்சில்வல்லோசை மிகுதியாக இருப்பதைக் காணலாம். வல்லோசை மிகுதியாக உள்ள கவிதையில் வீரமும் வெகுளியும் நன்கு வெளிப்படு வதைக் காணலாம். கூடல் மாநகரத்தில் கோவலன் பாண்டியனால் . கொலை செய்யப்படுகின்றான். அறச்செல்வி யாகத் திகழ்ந்த கண்ணகி, கணவனை இழந்தவுடன் மறச் செல்வியாக மாறுகின்றாள். பொறுமையே வடிவமாக விளங்கிய அக்கற்பரசி வீரவடிவத்துடன் பொங்கி எழுகின்றாள். வெகுளி அவள் உள்ளத்திலிருந்து உந்திக்கொண்டு மேல் எழுகின்றது. அரண்மனைக் காவலாளனை நோக்கிக் கண்ணகி உரைக்கின்ற ஒவ்வொரு சொல்லிலும் அவளது வீர உணர்ச்சியையும் கோபத்தின் வேகத்தையும் மிகத் தெளிவாகக் காணலாம்.

" அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே "

என்று கண்ணகி வீர உணர்ச்சியுடன் கோபக் குரலில் வாயிற் காப்போனை விளிப்பது அவன் கன்னத்தில் ஓங்கி அறைவதைப் போலிருக்கின்றது ; இளங்கோவடிகள் கண்ணகியின் உணர்ச் சியை நன்கு புலப்படுத்தும் வகையில் வல்லெழுத்துக்களை இங்கு மிகுதியாகப்பயன்படுத்தியிருப்பதுமிகவும்பொருத்தமாக அமைந்திருக்கின்றது. இதைப் போன்ற மற்றொரு காட்சியைக் கம்பராமாயணத்தில் காணலாம்.

பரதன் இராமனைத் தேடிக்கொண்டு காட்டிற்குப்போகிறான் இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்து வரவேண்டும் என்பதே தூய இளவலாகிய பரதனின் நோக்கம். பரதனின் வரவைத் தவறாக உணர்ந்துகொள்கிறான் குகன். இராமனுடன்

போர்தொடுக்கவே பரதன் பெரும்படையுடன் புறப்பட்டிருக்கின்ருன்என்று பிழைபட நினைக்கின்ருன் குகன்; அவன்உள்ளத்தில்வெகுளி கனல்போல் பொங்கி யெழுகின்றது. அவன் உதட்டைக் கடித்த வண்ணமிருக்கின்ருன்; அவன் பேசுகின்ற வெடுவெடு மொழி வெட்டுமொழி போல் இருக்கின்றது. அவன் விழியில் கோபக் கனல் தீப்பொறியைப் போல் தெறிகின்றது. குகனின் இத்தகைய வெகுளி உணர்ச்சி கற்போர் செவியிலும் சிந்தையிலும் பதியும் வண்ணம் கம்பர் வல்லின எழுத்துக்களையுடைய சொற்களையே மிகுதியாகப் பயன் படுத்துகின்ருர். குகனின் வெகுளியைப் பாட்டிலுள்ள ஒவ்வொரு சொல்லும் வீரத்துடன் பாடுகின்றது.

"கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்கண் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்கும் கொம்பினன்
கிட்டிய தமரெனக் கிளர்ந்த தோளினன்"

இவ்வாறு இடத்திற்கு ஏற்பப் பொருத்தமான சொற்களைப் பயன் படுத்துகின்றவனே சிறந்த கவிஞன்.

## இடையொலி :

மெல்லொலியைப் போன்ற செவியின்பமும் கவியின்பமும் தரவல்லன ஒருசில இடையொலிகள். அவற்றுள் தலையானது தமிழருக்கே உரிய 'ழ' கர ஒலியாகும்; கண்ணகியின் எழிலைப் புனைந்துரைக்கின்ருன் கோவலன். கண்ணகியின் மொழியின் பத்தைக் கூறுமிடத்து "உன் முதிராத மழலைமொழி, குழலிசை யாழிசை அமிழ்தம் ஆகியவற்றைப் பக்குவமாகக் கலந்து குழைத்ததைப் போல் சுவையாக இருக்கின்றது; உன் மென் மொழிக்குப் பசுங்கிளிகள் தோற்றுவிட்டன என்கின்ருன். கண்ணகியின் இன்மொழியை, நன்மொழியை, தேமொழியைப் பாடப் போந்த இளங்கோவடிகள் ழகர ஒலிதோன்ற நயமொழியால் இனிது பாடுகின்ருர்.

"அளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியும்"

என்று கண்ணகியின் அமிழ்து மொழியை அமிழ்து மொழியால் சிலம்பு இயம்புகின்றது.

### விரைவு ஒலி :

கம்பராமாயணத்தில் ஓர் அருமையான காட்சி. சீதையை மணம் செய்யுமுன் வில்லையெடுத்து வளைக்க விருக்கின்றான் இராமன். அவன் எவ்வாறு வில்லை எடுத்தான் என்பதைக் கம்பர் ஒலி நயம் தோன்ற இனிது இயம்புகின்றார். சீதைக்குச் சூட்டவிருக்கும் மணமாலையை எடுப்பதுபோல் மிக எளிதாகவும் விரைவாகவும் இராமன் வில்லை எடுத்தான். இராமன் வில்லை மிக விரைவாக எடுத்ததைப் போல் பாட்டும் விரைந்து ஓடுகின்றது. அப்பாட்டின் ஓட்டம் பின்வருமாறு :

" ஆடக மால்வரை அன்னது தன்னைத்
தேடரும் மாமணி சீதை எனும்பொன்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலைஇ தென்ன எடுத்தான் "

இராமனே சீதைக்கு மணமாலை சூட்டுபவன் என்பதைக் குறிப்பாக முன்கூட்டியே உணர்த்தும் கம்பரது ஆற்றல் ஈண்டு வியந்து பாராட்டத் தக்கது.

### சொற் சிலம்பம் :

நல்ல கருத்துக்களை இன்மொழியில் இயற்கையான முறையில் இயம்புவதே கவிதை. கவிதையிலுள்ள சொற்கள் சொற்றொடர்கள் ஆகியவை இயல்பாகவே அமையவேண்டும். சொல்லுக்கு முதன்மை யளித்து இயற்றப்படும் கவிதையில் சொற் சிலம்பம் மிகுந்து தோன்றுமே தவிரக் கவிதையின் உயிர் நாடியான கருத்து புலப்படாது. கவிதையில் ஏதாவது கருத்து உண்டா இல்லையா என்று கற்போர் ஐயுறுமளவிற்கு எதுகை மோனை முதலிய புற அழகுக்கே முதன்மை கொடுத்து இயற்றப்படும் கவிதை உயர்ந்த கவிதையாகாது. சில கவிஞர்கள் வேண்டுமென்றே கரடு முரடான சொற்களை வலிந்து பயன்படுத்தித் தம் சொற்சிலம்பம் கற்போர்க்குத் தோன்றும் வகையில் கவிதை யாப்பார்கள். அக்கவிதை, கனிபோன்று அமைவதற்கு மாறாக முறுக்குபோன்று கடாமடா என்று ஒலிக்கும்; கற்போரை மிரட்டும், உருட்டும்; சொற் சிலம்பத்தில் சொல் ஆரவாரம் இருக்கும்; சொற்சுவை இருக்காது. சொல் அடுக்கு இருக்கும் ; சொல் நயம் இராது. சொல் பகட்டு இருக்கும் ; சொல் இனிமை இராது. பார்ப்பதற்கு ஒரே தடபுடலாக இருக்கும்; உள்ளே கருத்து ஆழமோ பொருட்செறிவோ இராது.

# ஜலதோஷம்

**தஞ்சை. திரு. நா. தனுக்கோடி,**

மருத்துவ அலுவலர், திருநெய்ப்பேர். 610 103

ஜலதோஷம், பீநசம், மார்சளி, மூக்கு தொண்டைச்சளி, அடுக்குத்தும்மல், மூக்கடைப்பு, சளிஇருமல், வரட்டிருமல், தலைகனத்தல், இஸினேபிலிஸ் என்ற பல்வேறுபேர்கொண்டு, பல்வேறு உருக்கொண்டு சரீரத்தின் செயலைக்குறைக்கும் ஒரு வியாதியை ஜலதோஷம் என்றோ, ஜலதோஷத்தால் ஆரம்பித்த தென்றோ கூறுவத வழக்கம். இந்நோய் எந்தக்காலங்களில் ஏற்படும் என்று நிர்ணயிப்பது சங்கடம்.

ஜலதோஷத்திற்கான பலகாரணங்களில் ஒன்று பருவ மாறுதல். பொதுவாக, கோடைமாறிக் காற்றோ, காற்றுமாறி மழையோ, மழைமாறிப் பனியோ, பனிமாறிக் கோடையோ ஏற்படும்போதும், புழுக்கம், மந்தாரம், பனிக்காற்று தூசி நிறைந்தகாற்று இவையாவும் தோன்றும்போதும் இதுவருவது இயற்கை. இடமாறுதலும் நாம் குடிக்கவும், குளிக்கவும் உபயோகிக்கும் நீரின்மாறுதலும், நீரை உபயோகிக்கும் வகையில் மாறுதலும் முதலிய இவ்வகை மாறுதல்களைக்கூடச் சரீரம் தாங்க சக்தியற்றிருப்பதுதான் ஜலதோஷத்துக்குக் காரணம். மூக்கிலும் மற்றசுவாச உறுப்புக்களிலும், மேல் தோலிலும் உள்ள சில அவயவங்கள் வெளியில் உள்ள சீதோஷ்ணத்திற்கேற்ப உள்ளுறுப்புக்களைமாற்றி அமைத்து உடலுக்கு உதவச்செய்வதால்தான் மாறுபட்ட சீதோஷ்ண நிலையிலும் நாம் வாழமுடிகிறது. இச்செயல் தளர்ந்தால் சீதோஷ்ணம் சிறிது மாறினும் நம்மைப் பாதிக்கிறது. இது எல்லா வியாதிகளுக்கும் பொதுவெனினும் ஜலதோஷத்தில் இதன் செயலை உணராமல் இருக்கமுடியாது.

சிலருக்கு வானம் மந்தாரம்தட்டினால்போதும், அல்லது கிணற்று ஜலத்தில் ஸ்நானம்செய்தவர் நதியிலோ அல்லதுவேறு விதமான ஜலத்திலோ ஸ்நானம் செய்தால்போதும், வெந்நீர் குடித்தும் குளித்தும்பழக்கமுள்ளவர் சற்றுப்பழக்கத்தைமாற்றிக் கொண்டால்போதும், புழுக்கமான இடத்திலிருந்தவர் சட்டென காற்றுள்ளஇடத்திற்கு வந்தால்போதும், வியர்க்கும்படியான வேலை, ஓட்டம், ஸ்திரி புருஷ சேர்க்கை, போன்ற தேகக் களைப்பூட்டும் செய்கைகளில் ஈடுபட்டவுடன் குளிர்ந்த ஜலத்தைக்குடித்தாலோ, குளிர்காற்றில் சிறிது இருந்தாலோ

போதும், ஜலதோஷம் காத்துக்கொண்டிருக்கும். உடன் தும்மலும், தொண்டை கரகரப்பும் இருமலும், இழுப்பும், மூக்கு அடைப்பும் தொடர்ந்து சங்கிலிபோல் ஏற்பட்டுவிடும்.

சரீரத்தில் பொதுவாக, பலக்குறைவு, சகிப்புத்தன்மை குறைவு ஏற்படாமல் பாதுகாக்க முடியுமா என்பதை இக்காலத்தில் யாவரும் அறிந்திருத்தல் அவசியம். அப்பொழுது தான் நோயற்று வாழமுடியும். வாரம் இருமுறை - முடிந்தால் தினந்தோறும் உடல்முழுதும் தைலம்தேய்த்து உடல்நிலைக்கும் காலநிலைக்கும், தேகநிலைக்கும் ஏற்றவாறு குளிர்ந்தநீரிலோ அல்லது வெந்நீரிலோ ஸ்நானம் செய்பவர், பகலில் தூங்காமல், இரவில் கண்விழியாமல், இரவில் முன்யாமத்திலே தூங்க ஆரம்பித்து விடியற்காலையிலே எழுபவர், தேகசுத்தி, மலசுத்தி இவைகளில் கருத்துள்ளவர்கள், தேகப்பயிற்சியைக்களைப்பேற்படாத அளவில் விடாமல்செய்துவருபவர், காலத்தில்மிதமாயும் ஹிதமாயுமுள்ள உணவை ஏற்பவர், உத்ஸாஹம், தைர்யம், அமைதி இவைகளை வளர்க்கும் செய்கைகளில் ஈடுபடுபவர் இவர்களுக்குப் பலக்குறைவே ஏற்படுவதில்லை.

ஜலதோஷம் அடிக்கடி ஏற்பட்டுத் திணறுபவர்கள் யாது செய்வது? இவர்களும் முன்கூறிய நல்ல பழக்கங்களைக் கையாள முற்படுவது அவசியம். வரத்தொடங்கும்நோயையோ வந்ததையோ போக்க, சில கைமுறைகளையும் பழக்கவழக்கங்களையும் கைக்கொள்வது மிகவும் அவசியமாகும். அடிக்கடி சளிபிடித்துக்கொள்பவர்கள் வராமல் பாதுகாப்பதற்காகவும் பொதுவாக, தேகபல அபிவிருத்திக்காகச் சியவனப்ராசம், அஸ்வகந்திலேகியம் (தஞ்சை அரண்மனை வைத்தியமுறைப்படி தயாரித்தது) போன்ற மருந்துகளைச் சாப்பிட்டு, தேகபலத்தைச் சீராக்கிக்கொள்ளலாம். தலையில் தைலம் தடவிக்கொள்ளாமல் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதையும் உடம்பில் தைலம் தடவிக்கொள்ளாமல் வெந்நீரில் ஸ்நானம் செய்வதையும் அறவே நிறுத்தவேண்டும். குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்பவர் முதலில் தலையிலிருந்து ஜலம் விட்டுக்கொண்டு ஸ்நானம் செய்யவேண்டும். ஆறு, குளங்களில் அமிழ்ந்து ஸ்நானம் செய்பவர் இடுப்பளவு ஜலத்தில் வெகுநேரம் காத்திராமல் உடன் அமிழ்ந்து, ஸ்நானம் செய்வது நலம். வெந்நீரில் ஸ்நானம் செய்யும் பொழுது உடலை நன்கு நனைத்துக்கொண்ட பிறகே தலையில் சற்று ஆறிய வெந்நீரை விட்டுக்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் ஜாக்கிரதையாக இருப்பது உடலின் பலக்குறைவை, சோதனைக்குள்ளாக்காமலிருக்க உதவும்.

வில்வஇலை, துளசிஇவற்றில் ஒன்றையோ இரண்டையுமோ தனித்தனியாக இடித்துப் பிழிந்தசாற்றில் சமபாகம் எள் நெய் அல்லது தேங்காய் எண்ணெய்சேர்த்து பதமாகக்காய்ச்சி, கசண்டு மணல்பாகத்தில்வரும்போதுஇறக்கிவடிகட்டிவைத்துக் கொண்டு தலையில் தடவி ஸ்நானம் செய்யலாம். மூக்கடைப்பு, எரிவு இருந்தால் மூக்கினுள் சில துளிகள்விட்டு, சிரமத்தைக் குறைத்துக் கொள்ளலாம். சளியால் ஏற்படும் காதடைப்பிலும் சீழிலும் இளஞ்சூடாக்கிக் காதில் 4—5 சொட்டுகள் விட்டுப் பஞ்சடைத்துக்கொள்ளலாம். தொண்டைகரகரப்பு, டான்ஸில் வீக்கமுள்ளவர் இதையே வாயிலிட்டுக் கொப்பளிக்கலாம். முக்கூட்டு எண்ணெயை (தேங்காய் எண்ணெ அல்லது எள் எண்ணெ, ஆமணக்கெண்ணெ) இஞ்சி, மஞ்சள், மிளகு, மிளகாய் இவைகளைப்போட்டுக்காய்ச்சிக்கொள்ளலாம்அல்லதுதயாரித்த லாஷாதி தைலம், பலாச்வகந்தாதி தைலம், அஸனபில்வாதி தைலம், ஸிந்துவாரதைலம், ஷட்சுக்ர தைலம் போன்றவைகளை அடிக்கடி உபயோகிக்கவும். பயற்றுமாவும், கடலைமாவும், பரிமண ஸ்நானப்பொடி, உசிலம்பொடிபோன்றவைகளைப் பழைய வடிக்கஞ்சியில் குழப்பி மங்களஸ்நானம் செய்து மங்களமாய் யாவரும் வாழ இறைஅருள் புரிவாராக.

---

## கந்தசஷ்டி விழா

முருகன் தமிழகமக்களால் சிறப்பாகப்போற்றி வழிபடப் பெறும் தெய்வமாவார். அப்பெருமானுக்குரிய ஆறுவகை வீடுகளாகத் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன் குடி, திருவேரகம், குன்றுதோருடல்(திருத்தணி), பழமுதிர்சோலை என்னும் தலங்களைக் கூறுகிறது திருமுருகாற்றுப்படை. நமது ஆதினத்திற்குச் சொந்தமான புள்ளிருக்குவேளூரில் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரனாக அப்பெருமான் விளங்குகின்றார். இவ்வாறே முருகனுக்குரிய மற்றும் பல தலங்கள் நம்நாட்டில் உள்ளன. அருணகிரிநாதர் பல திருத்தலங்களுக்கும் சென்று திருப்புகழ் முதலியன பாடி முருகப்பெருமானை வழிபட்டுள்ளார். ஆறு முகங்களோடும் பன்னிருகரங்களோடும் விளங்கித் தன்னை வழிபடும் அன்பர்கட்கெல்லாம் அருள்புரியும் அக்கந்தக் கடவுள் சூரனைக்கொன்று தேவர்களுக்கு நல்வாழ்வருளிய திருநாள் கந்தசஷ்டி. கந்தசஷ்டி விழா துன்மதி ஆண்டு ஐப்பசித் திங்கள் 17 ஆம் நாள் 2—11—81 அன்று வருகிறது. முருகனுக்குரிய சிறப்பு விழாவாகிய இந்நாளில் அன்பர்கள் விரதமிருந்தும் பாராயணங்கள் செய்தும் முருகனை வழிபட்டு அருள் நலம் பெறுவார்களாக.

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாள் ஆலயவழிபாடு 24—9—81 வியாழக்கிழமையன்று திருக்குடவாயில் அருள்மிகு கோணேஸ்வரசுவாமி திருக்கோயிலிலும், திருச்சேறை அருள்மிகு செந்நெறியப்பர் திருக்கோயிலிலும் சிறப்பானமுறையில் நிகழ்வுற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நிகழ்வுற்ற வழிபாட்டின்போது அவ்வத்தலத் திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றன. "திருக்குடவாயில் திருக்கோயிலில்" தருமையாதீனத் தமிழ்ப்புலவர் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ., அவர்களும் புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., அவர்களும் வித்துவான் திரு மு. இரத்தின தேசிகர் அவர்களும் வித்துவான் திரு. சு. மு சுந்தரராஜன் எம்.ஏ. அவர்களும் ஆதீன அடியவர் ஸ்ரீ நெல்லையப்ப சுவாமிகளும் சமயவிரிவுரை நிகழ்த்தினர். அச்சிடப்பெற்ற தலத்திருப்பதிகநூல் வந்திருந்த அன்பர்கட்கு வழங்கப்பட்டது. அன்பர் பலர் ஆலயவழிபாட்டிற் கலந்துகொண்டு பயனுற்றனர்.

## ஸ்ரீ அருணந்திதேவர் குருபூஜை விழா

**தருமையில் :**

சந்தானகுரவருள் இரண்டாமவராகிய ஸ்ரீ அருணந்திதேவர் குருபூஜைவிழா 26—9—81 சனிக்கிழமையன்று நிகழ்வுற்றது. காலை, தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சந்தானாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் வழிபாடுநிகழ்வுற்றது. அன்றுமாலை 7 மணியளவில், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் பி. லிட்., அருணந்திதேவர் அருள் வரலாறு கூறி, 'சிவஞான சித்தியார்' என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் காலை, மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள்.

**திருத்துறையூரில் :**

திருத்துறையூர் ஸ்ரீ சிஷ்டகுருநாதேசுவரர் ஆலயத்தில் சுவாமி, அம்பாள் ஆகிய மூர்த்தங்களுக்கும், ஸ்ரீ அருணந்தி தேவர் குருமூர்த்த ஆலயத்தில் ஸ்ரீ அருணந்திதேவருக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. மாலை 7 மணியளவில் வித்துவான் திரு. ந. சண்முகசுந்தரதேசிகர் அவர்களும் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்த்துணைப்பேராசிரியர் வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., அவர்களும் வித்துவான் திரு. சொ. முத்தையன் எம். ஏ., அவர்களும் விரிவுரையாற்றினர். அன்பர்பலர்கலந்துகொண்டு குருவழிபாடு ஆற்றியும், விரிவுரை கேட்டும் பயனுற்றனர்.

## ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு 31 ஆவது சதசண்டி வேள்விவிழா

தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கா தேவிக்கு இவ்வாண்டும் 29—9—'81 முதல் 8—10—'81 முடிய பத்துநாட்களும் நவராத்திரிவிழாவை முன்னிட்டு உலகநலம் கருதி, சதசண்டிவேள்வி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப் பாங்கின்வண்ணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ துர்க்காதேவி சந்நிதியில் மலர்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பெற்றிருந்த மகாவேள்வி மண்டபத்தில், யாககலசங்கள்வைத்து, அலங்கார ஆராதனைகள் செய்வித்து, சதசண்டி வேள்வி சிறப்பானமுறையில் நடைபெற்றது. நாள்தோறும் சுவாசிநீ, குமாரி, வடுபூஜைகள், சதுர்வேதபாராயணம், துர்க்கா சூக்தபாராயணம், தேவீ மகாத்மிய பாராயணம், திருமுறைப்பாராயணம், அபிராமிஅந்தாதி பாராயணம், ஸ்ரீ துர்காதேவிக்கு லட்சார்ச்சனை, வித்யாசக்ரமாகிய மேருவிற்கு, சகஸ்ரநாமார்ச்சனை மற்றும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் ஆகியன நடைபெற்றன.

7—10—81 புதன்கிழமை பகல் சப்தசதி ஹோமமும் மகாபூரணாகுதியும் நிகழ வேள்வி இனிது நிறைவுற்றது. 8—10—'81 வியாழக்கிழமை விஜயதசமியன்று காலை ஸ்ரீ துர்க்கா தேவிக்கு யாக கலசாபிஷேகமும் விசேஷ அலங்கார ஆராதனைகளும் நிகழ்வுற்றன. நாள்தோறும் இரவுவழிபாட்டின்அங்கமாக 29—9—81 முதல் 4—10—81 வரை, பிர்மஸ்ரீ P. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களாலும், 5—10—81 முதல் 7—10—81 வரை வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் பி. லிட்., அவர்களாலும்

ஸ்ரீ தேவிபாகவத விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றி அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள்.

## ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழா

தருமையாதீனக் கல்வி நிலையங்களாகிய வேதசிவாகம பாடசாலை, தேவாரப்பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, ஆதீனப் பல்கலைக் கல்லூரி என்னும் இவற்றின் சார்பில் நவராத்திரி நாட்களில் கலைமகள் விழா நிகழ்வுற்றது. நாள்தோறும் மாலை 3–30 மணியளவில் தருமையாதீனம் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் விழா நடைபெற்றது. மாயூரம் திரு. வி. ஆறுமுகம் பிள்ளை I. A. S. (Retd), வழக்குரைஞர் திரு. சி. ஆர். குஞ்சிதபாத அய்யர் பி. ஏ., பி. எல்., மேலையூர் தாசில்பண்ணை, செந்தமிழ்ப் புரவலர், திரு. இரா. இராஜசேகரன் பி. எஸ்ஸி., பி. எல்., மாயூரம் டாக்டர் திரு. மு. சுவாமிநாதன் எம். பி., பி. எஸ்., மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் திரு. தி. வ. காந்திமதி நாதன் பி. ஏ. (ஆனர்ஸ்) துணைப்பேராசிரியர் செஞ்சொற் கொண்டல், டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச்டி., திரு. அ. கலியபெருமாள் எம். ஏ. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர் பள்ளித் தலைமையாசிரியர் திரு. த. விவேகானந்தம் பி.ஏ.பி.எட். வேதசிவாகம பாடசாலை, தலைமையாசிரியர் சிவஸ்ரீ. எஸ். சுவாமி நாத சிவாசாரியார் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். ஆதீனக் கல்விநிலையங்களின் ஆசிரியர்களும்ஆதீன அடியவர் ஸ்ரீநெல்லையப்ப சுவாமிகளும், ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதுகலை முதலாண்டு மாணவர்களும் விரிவுரை நிகழ்த்தினர். நாள்தோறும் ஆதீனக் கல்விநிலைய மாணவ மாணவியரால் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.

## ஆதீனத் திருக்கோயில்களில் நவராத்திரி விழா

நவராத்திரி விழாவை முன்னிட்டு, தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர், திருபுவனம், வைத்தீசுவரன்கோயில், சீகாழி, திருவையாறு, திருப்பனந்தாள், குத்தாலம், பேரளம், திருக்குறுக்கை, மாயூரம் – வள்ளலார்கோயில், திருக்குவளை, திருக்கற்குடி, விளநகர், ஆச்சாள்புரம் ஆகிய தலத்திருக் கோயில்களில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் உலக நலம் கருதி,

அம்பாளுக்கு அருச்சனையும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

2—10—81 வெள்ளி அன்று திருக்குவளையில் வித்துவான் திரு. சு. மு. சுந்தரராஜன் எம். ஏ., விளநகரில் வித்துவான் திரு. சொ. முத்தையன் எம். ஏ., பேரளத்தில் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் பி. லிட்., ஆகியோர் விரிவுரையாற்றினர்.

6—10—81 செவ்வாயன்று மாயூரம் - வள்ளலார்கோயிலில் வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ., திருப்பனந்தாளில் வித்துவான் திரு. சுவர்ணகாளீஸ்வரன், திருபுவனத்தில் வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., திருக்குறுக்கையில் புலவர் திரு. கே. கணபதி, குத்தாலத்தில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., திருக்கற்குடியில் வித்துவான் திரு. மு. வைத்தியநாதன், திருக்கடவூரில் திரு. அகரமுதல்வன் எம். ஏ., சீகாழியில் புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ. திருவையாற்றில் வித்துவான் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., வைத்தீஸ்வரன்கோயிலில் வித்துவான். திரு. சொ. முத்தையன் எம்.ஏ. ஆகியோர் அருள்மிகு அன்னையின்பெருமையை மக்கள் அறிந்து உய்யும்வகையில் சொற்பொழிவுநிகழ்த்தினர். மாயூரம் கணநாதர் பொம்மை நாடக சபையினர் 3—10—81 அன்று திருப்பனந்தாளிலும் 4—10—81 அன்று திருபுவனத்திலும் ' பக்த மார்க்கண்டேயன் ' பற்றியும் 5—10—81 அன்றுதிருவையாற்றில் ' வள்ளித் திருமணம் ' பற்றியும் பொம்மலாட்டம் நிகழ்த்தினர். அவ்வத்தலத்திலுள்ள அன்பர்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பயனுற்றனர்.

---

## கடிதம்

தங்கள் மாதந்திர பத்திரிகை " ஞானசம்பந்தம் " வாசிக்க வாய்ப்பு இருந்தது. நான் ஓர் கிறிஸ்து மதத்தைச் சேர்ந்த வனாயினும் அதிலுள்ள கருத்துகள் மிகவும் உயர்ந்ததாக தெரிகிறது.

**அல்பான்ஸ் பெர்னன்டோ** F. I. C. S.

பழயகாயல் 628 152

4—10—'81. திருநெல்வேலி மாவட்டம்.

உ

# எதிர்காலம்

★

## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துன்மதிஸு ஐப்பசிமீ 1வ முதல் 30வ முடிய
(17—10—81 முதல் 15—11—81 முடிய)

ஸ்ரீ துன்மதிஸு ஐப்பசிமீ 1வ ஸ்திரவாரம் உரோகிணி நக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 22 நாழிகை 7 வினடிக்கு கும்ப லக்கினத்தில் ஸ்ரீலோக ரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு கன்னியாராசியிலிருந்து துலாராசி சங்கிரமணமாக ஐப்பசிமாதப் பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று துலாவிஷு புண்ணிய காலமாகும். எல்லோரும் மாதம் பூராவும் பிராதகாலத்தில் புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானம்செய்தல் விசேஷமானதாகும். வறுமைநீங்குவதாகி, சுபிட்சவாழ்க்கை ஏற்படும். சங்கிரமகால கிரகஸ்திதியினல் உலகில் எங்கும் சுபிட்சசூசகமாகப் பூமியில் பயிர் விளைந்து பிரஜைகள் க்ஷேமமாக வாழ்வார்கள். தேசங்களில் மன்னர்கள் ஜனதிபதிகள் செங்கோல் ஆட்சிபுரிந்து மக்களை இரட்சிப்பார்கள்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் திருவீற்றுள்ள சிவஞானகுருமகான்கள் குருமகாசந்நிதானங்கள் உலகத்திற்கு, சிவாசாரநியமத்தினல் உள்ள உயர்வினையும் உண்மை ஞானர்த்தங்களையும் எடுத்தியம்பி அனுக்கிரகம் செய்தருளுவார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் சிறப்பாக நடைபெற்றுவரும். எல்லா பிரஜைகளும் ஆலயம் சென்று சிவதரிசனம்செய்து மனவமைதியுடன் க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

### குரு பெயர்ச்சி

குறிப்பு:- ஸ்ரீ துன்மதிஸு ஐப்பசிமீ 3வ (19—10—81) சோமவாரம் சூரிய உதயாதி 48 நாழிகை 29 வினடிக்கு, கடக

லக்கினத்தில் ஸ்ரீ குருபகவான் மேடாதியாக 180 பாகையைக் கடந்து (180.) கன்னியா ராசியிலிருந்து துலாராசியில் பிரவேசிக்கின்றார்.

குரு துலாராசியில் சஞ்சரிக்கிறகாலத்தில் மேஷம், மிதுனம், கன்னி, தனுசு, கும்பம் இவ்விராசியுடையோருக்கு மேன்மை ஸ்திதி, செல்வ அபிவிருத்தி, குடும்ப சுபிட்சம், விவாக சுப மங்களம், புத்திர பிராப்தி ஆகிய விசேஷ பலன்களை ஏற்படுத்தும்.

சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவ்விராசியுடையோருக்கு, சாதாரண பலனாக இருந்துவரும். ஜனனகால கிரக ஸ்திதியைப் பொருத்து பலாபலன்கள் நடைபெறுவதாகும். இவ்விராசியுடையோர் குருவாரத்தில் குருகிரகபிரீதி செய்து வருதல் நலம்.

ரிஷபம், கடகம், துலாம் இவ்விராசியுடையோருக்கு சாதாரண பலனாக இருந்துவரும். ஜனனகால கிரகஸ்திதியைப் பொருத்து பலாபலன்கள் நடைபெறுவதாகும். இவ்விராசியுடையோர் குருவாரத்தில் குருகிரக பிரீதி செய்துவருதல் நலம்.

எல்லா இராசியையுடையோரும் சிவாலயம் சென்று அருள்மிகு தெக்ஷிணாமூர்த்தி சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்து, தரிசித்து சந்நிதியில் வேதம் ஓதுவோருக்கு வஸ்திர தானம் சுவர்ணதானம் செய்தும் குழந்தைகள் முதல் அந் நேரத்தில் மூர்த்தியை தரிசிக்கின்ற பக்தர்கள் அனைவருக்கும் மூர்த்தியின் பிரீதிபிரசாதங்கள் வழங்கியும் வருதல் நன்று.

குருபகவான் அருள் ஏற்பட்டு சகல பாக்கியங்களும் ஏற்படும். செல்வீகம், பிரபுத்துவ பரந்த மனப்பான்மை, புகழ் ஆகிய மேன்மை ஸ்திதி ஏற்படும்.

1. மேஷம் :- அசுவதி – பரணி கார்த்திகை – ¼

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானம் குறிப்பிட்டுள்ளபடிக்கு கைக்கு வருவதாகும். பூமியில் இயந்திரங்களில் நற்பல பிராப்தியை ஏற்படுத்தும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் அருளால் முயற்சிக்கின்ற எல்லாக்காரியங்களும் எளிதில் நிறைவேறும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். தாரபுத்திரர்களின்

சௌக்கியம் நன்ருக இருந்துவரும். அக்டோபர் 18, 19, 25, 26, 27, 28, 29 நவம்பர் 4, 5, 6, 7, 10, 11, 12, 15 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். அக்டோபர் 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீர்ஷம் ½

( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபி விருத்தியில் திரண்ட பண வருமானம் வரும். சகோதரர் இஷ்ட மித்திரர்களினுல் சந்தோஷம் நிலவும். வித்துவத்துவம் கலைத் துறைகளில் நல்லன ஏற்படும். அக்டோபர் 31 தேதியில் இருப்பிடத்தில் நன்மைகளை ஏற்படுத்தும். புத்திரர்களின் க்ஷேமம் நன்ருக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் மனம் ஒத்த நிலைமை ஏற்படும். அக்டோபர் 17, 20, 21, 22, 27, 28, 29, 30, 31 நவம்பர் 6, 7, 8, 9, 12, 13, 14 தேதிகளில் தானுதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 1, 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் நல்லவிதத்தில் வரும். சகோதரரின் விசுவாசம் ஒத்துழைப்பு பலம்தரும். வீடு வாகன பிராப்தியில் நல்ல சௌகரியங்களை ஏற்படுத்தும். புத்திரனுக்கு அக்டோபர் 19உ அளவில் நன்மையையேற்படுத்தும். ஞாயிற்றுக் கிழமை சூரியார்ச்சனை செய்ய, வயிற்றில் எரிச்சல், அஜீர்ணம் போன்றவை நீங்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். அக்டோபர் 18, 19, 23, 24, 30, 31 நவம்பர் 1, 2, 3, 8, 9, 10, 11, 12, 15 தேதிகளில் மிகுந்த ஸ்லாக்கிய பலன்தரும். நவம்பர் 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டோ. )

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் தனதானிய வருமானம் வந்து நிறையும். அதற்கேற்ப விசேஷ செலவும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும்.

இக்காலம் அவசரமொழி பகர்தல் நிறுத்தி, மௌனம்கொள்ளு தல் நலம். நவம்பர் 2 தேதி முதல் எழுத்துமூல விஷயங்களில் தஸ்தாவேஜுகளில் ஸ்லாக்கிய பலனை உண்டுபண்ணும். எல்லாக்காரியங்களையும் திடசித்தமாக நிறைவேற்றுதலாகும். ஓர் புனிதஸ்தலம் செல்லுதல் ஆகும். அக்டோபர் 17, 20, 21, 22, 25, 26 நவம்பர் 1, 2, 3, 4, 5, 10, 11, 13, 14தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் வெகுவாகவரும். பூஷணங்களின் பிராப்தியையளிக்கும். வீடுவாகனங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும்.வித்தியாவியாபாராதிகலைத்துறைகளில்முன்னேற்ற ஸ்திதியாகும். எல்லாக் காரியங்களும் வெற்றிகரமாக நடை பெற்றுவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். அக்டோபர் 17, 18, 19, 23, 24, 27, 28, 29 நவம்பர் 4, 5, 6, 7, 13, 14, 15 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

( டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் நல்ல பண வருமானங்கள் வந்து கொண்டிருக்கும். உடன் அவசிய செலவினங்களை ஏற் படுத்தும். ஓர் புதிய ஆபரண பிராப்தியைத்தரும். இல்லத்தில் சுப நிகழ்ச்சிகள் ஏற்படும். வீடுவாகன பிராப்தியில் நல்லன ஏற்படுத்தும். உத்தியோகம் உபதொழில்கள் இவற்றில் நல்ல பிரயோஜனம் வருவதாகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். அக்டோபர் 18, 19, 20, 21, 22, 25, 26, 30, 31 நவம்பர் 6, 7, 8, 9, 14, 15 தேதிகளில் தனுதாயாதி நற்பலன் களையளிக்கும். நவம்பர் 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி - விசாகம் ¾

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் நல்ல விதத்தில் வந்து

கொண்டிருக்கும். சுபமான காரியங்களில் செலவும் ஆகும். சகோதரர் சுகம் நன்றாக இருந்துவரும். இயந்திர வாகனங்களின் பிராப்தியையளிக்கும். ஒப்பந்தம் லேவாதேதிகளில் புதியன ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். அக்டோபர் 20, 21, 22, 23, 24, 27, 28 நவம்பர் 1, 2, 3, 8, 9, 10, 11 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 12, 13, 14, தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

( தோ. - ந. நி. நு. நே. - ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபி விருத்தியில் நல்ல பண வருமானம் வந்து சேரும். பூமியில் இயந்திர சாதனங்களில் விருத்தி பலன் ஏற்படும். சகோதரருக்கு சுபம் ஏற்படும். பந்து மித்திரர்களின் வருகை உபசரணை சந்துஷ்டியாய் இருத்தல் ஆகும். வீடுவாகனங்களின் பிராப்தியில் நல்ல சௌகரியங்களை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். அக்டோபர் 17, 22, 23, 24, 25, 26, 30, 31 நவம்பர் 4, 5, 10, 11, 12, 13, 14, தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். அக்டோபர் 18, 19 நவம்பர் 15 இத்தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

( யே. யோ. பா. பி. - பு. த. ப, ட. - பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் மூன்றுவிதங்களில் பண வருமானங்கள் வருவதாகும். பொன் மணி பூஷணங்களையளிக்கும். ஸ்திரி வழியில் கௌரவ டாம்பீகங்களில் அவசிய செலவு ஏற்படுவாதாகும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் பிரபலஸ்திதியாகும். வீடு வாகனங்களில் முதலீடு செய்யும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். அக்டோபர் 17, 18, 19, 25, 26, 27, 28, 29 நவம்பர் 1, 2, 3, 6, 7, 13, 14, 15 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். அக்டோபர் 20, 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம்- அவிட்டம் ½
( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம்வரும். சகோதரருக்கு விபத்து அல்லது மன அதிர்ச்சி ஏற்படச்செய்யும். வீடு வாகனபிராப்தி யில் நல்ல சௌகரியம்தரும். கொடுக்கல் வாங்கல்களில் நல்ல செலவானியை ஏற்படுத்தும். ஒப்பந்தங்களில் புதிய ஏற்பாடு களை செய்விக்கும். புத்திரர் அல்லது பௌத்திரிக்கு நல்லன ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். அக்டோபர் 18, 19, 20, 21, 27, 28, 29, 30, 31 நவம்பர் 4, 5, 8, 9, 15 இத்தேதி களில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். அக்டோபர் 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾
( கு. கே, - கோ. ஸ. ஸி. ஸூ. - ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் கணிசமாகவரும். பூமி செந் நெல் பிராப்தியில் நற்பலன் வந்துசேரும். வீடு வாகனங்களின் அனுபோக பிராப்தி நல்ல சௌகரியத்தை ஏற்படுத்திவரும். புத்திரனுக்கு மேலிடத்தின்நன்மைகளைஏற்படுத்தும். மனைவிக்கு இரத்தபித்த நலிவாகிக்குணமாகும். அக்டோபர் 20, 21, 22, 23, 24, 30, 31 நவம்பர் 1, 2, 3, 6, 7, 10, 11, 12 தேதிகளில் தனதா யாதி நற்பலன்களை ஏற்படுத்தும். அக்டோபர் 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.
( தி. - து. ஸ. ச. த. - தே. தோ ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் கெடியானதோரணைக்கு ஏற்ப கண்யஸ்திதியிலேயே வந்துகொண்டிருக்கும். சகோதரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். வீடு வாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். புத்திரர் பௌத்திரர்களின் நலம் மகிழ்ச்சிதரும். மனைவிக்குச்சாதாரணமாகமயக்கநலிவுஏற்பட்டு உடன் குணமாகும். அக்டோபர் 17, 23, 24, 25, 26 நவம்பர் 1, 2, 3, 4, 5, 8, 9, 12, 13, 14 தேதிகளில் தனதாயாதி நற்பலன் களையளிக்கும். அக்டோபர் 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

# ஐப்பசிமாதச் சிறப்பு நாட்கள்

17—10—81 சனி, துலா ரவி 23-7 துலாவிஷு புண்யகாலம். மாயூரம் வள்ளலார்கோயில், திருவையாறு ஆகிய தலங்களில் துலாவிஷு தீர்த்தம். திருக்கடவூர் ஸ்ரீ காலசம்கார மூர்த்திக்கு அபிஷேகம். சீகாழியில் ஸ்ரீ உமாமகேசுவரருக்கு உச்சிக்காலத்தில் புழுகாப்பு. மாயூரம், தலைக் காவேரி முதலிய இடங்களில் துலாஸ்நான ஆரம்பம்.

20—10—81 செவ்வாய், திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை காளாஷ்டமி.

22—10—81 வியாழன், ஆயில்யவிழா தருமையாதீனம் 10 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிகசுவாமிகள் குருபூஜை.

24—10—81 சனி, திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் 26-வது குருமகாசந்நிதானம்ஸ்ரீலஸ்ரீசண்முகதேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடம் அமர்ந்தநாள்.

25—10—81 ஞாயிறு, பிரதோஷம், மாதசிவராத்திரி. திங்கள் விடியற் காலை நரகசதுர்த்தசி ஸ்நானம்.

26—10—81 திங்கள், தீபாவளிப்பண்டிகை.

27—10—81 செவ்வாய், சர்வ அமாவாசை. மாயூரம் - வள்ளலார் கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி கங்காதேவியுடன் தீர்த்தம் கொடுத்தருளல். கேதாரகௌரி விருதம்.

28—10—81 புதன், வேளூர், மாயூரம் குமரக்கட்டளை, சீகாழி, திருச்செந்தூர், பழனி முதலிய தலங்களில் கந்தசஷ்டி உற்சவாரம்பம். ஸ்ரீ மெய்கண்டார் குருபூஜை. பெண்ணாகடத்தில் ஸ்ரீமெய்கண்டாருக்கு விசேஷ அபிஷேகஆராதனை.

2—11—81 திங்கள், கந்தசஷ்டிசூரசம்காரம். வேளூர், மாயூரம்குமரக் கட்டளை, திருச்செந்தூர், பழனி முதலிய தலங்களில் [சூரசம்காரம்.

3—11—81 செவ்வாய், வேளூர் கந்தசஷ்டி தீர்த்தம்.

4—11—81 புதன், வேளூர், தெய்வயானை திருக்கல்யாணம்.

5—11—81 வியாழன், வேளூர், வள்ளியம்மை திருக்கல்யாணம்.

6—11—81 வெள்ளி, மாயூரம் வள்ளலார்கோயில் முதலிய தலங்களில் துலாஉற்சவஆரம்பம். வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக் [குமாரசுவாமி வீதியுலாக்காட்சி.

9—11—81 திங்கள், பிரதோஷம்.

10—11—81 செவ்வாய், திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவர பூஜை.

11—11—81 புதன். பௌர்ணமி விரத பூஜை. அன்னாபிஷேகம். தருமையாதீனம் 7 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக சுவாமிகள் குருபூஜை, தருமையாதீனம் 9 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் குருபூஜை.

12—11—81 வியாழன், கிருத்திகை விரதம். வேளூர்க் கிருத்திகை. தருமை சண்முகர் கிருத்திகை அபிஷேகம்.

15—11—81 ஞாயிறு, கடைமுகஸ்நானம்.மாயூரம்வள்ளலார்கோயில் திருவையாறு முதலிய தலங்களில் காவிரியில் கடைமுக தீர்த்தம். சங்கடஹரசதுர்த்தி. தருமையாதீனம் 22ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள் குருபூஜை.

மாயூரம் – வள்ளலார்கோயில்

## ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

# குரு பெயர்ச்சி விழா

நிகழும் துன்மதி ஆண்டு ஐப்பசித் திங்கள் 3 ஆம் நாள் (19, 20—10—1981) திங்கட்கிழமை உதயாதி நாழிகை 48–29 க்கு (இரவு 1–29 மணிக்கு) ஸ்ரீ குருபகவான் கன்னியா ராசியிலிருந்து துலாராசிக்கு எழுந்தருளுகிறார்.

குரு இயற்கையிலேயே தனிச் சிறப்புவாய்ந்த சுபக்கிரகம். சாத்வீக குணம் உடையது. காலபுருஷனுடைய அறிவாகக் கூறப் படுகிறது. நுண்ணறிவு, செல்வம், உடல்வளர்ச்சி, மகப்பேறு இவைகளை அடைவதற்குக்காரணமாவது. ஜாதகத்தில் இக்கிரகத்தின் நிலையைக்கொண்டுதான் இப் பயன்களை நிர்ணயிக்க வேண்டும். குரு நல்லநிலையில் ஜாதகத்தில் அமையுமானால், அந்த ஜாதகருக்கு நன்மை உண்டாகும். தனுசும் மீனமும் இக்கிரகத்திற்குச் சொந்த வீடாகும். கடகம் உச்சவீடாகும். மகரம் நீசவீடாகும். துலாம் பகைவீடாகும்.

இக்குருபெயர்ச்சியன்று குரு, தனது பகைவீடாகிய துலா ராசிக்கு எழுந்தருளுவதால், சுபக்கிரகம் வலுவிழந்து உலகிற்குப் பலவித தீமைகளை அளிக்கும். பெரும்பாலும் ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வோராண்டு இக்கிரகம் சஞ்சரிக்கும். ஆதலால் துலாராசியில் சஞ்சரிக்கும் காலம்வரை நாட்டில் தர்ம காரியங்கள் சிறப்பாக நடைபெறத்தடையேற்படும். ஆனால் பருவமழை நன்றாகப் பெய்து வளம்கொழிக்கும். நல்ல காரியங்களில் மக்களுக்கு ஈடுபாடு உண்டாகும்.

அவரவர் ஜாதகத்தில்சந்திரனை முதலாகக்கொண்டுகணக்கிடும் போது துலாராசி 2, 5, 7, 9, 11 ஆவது இடமாக அமைந்தால், அந்த ஜாதகருக்குத் திருமணம், மகப்பேறு, செல்வம், நோய்நீக்கம் ஆகிய நன்மைகள் ஏற்படும். 1, 3, 4, 6, 8, 10, 12 ஆவது இடமாக அமையு மானால், சில கஷ்டங்கள் உண்டாகலாம். அவர்கள் ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபட்டு கஷ்டங்களிலிருந்து விலகவேண்டும். குறிப்பாக கும்பம், மேஷம், மிதுன ராசிக்காரர்களுக்கு விசேஷமான நன்மைகள் ஏற்படும்.

துலாராசியில் குரு பிரவேசிக்கும் காலம் புஷ்கரம் எனப்படும். புண்யகாலமாகும். இந்தப் புண்யகாலத்தில் காவிரி ரிஷபதீர்த்தத்தில் நீராடி குருஞானவடிவாக ஞானோபதேசம்செய்யும் திருக்கோலத்தில் எழுந்தருளி அருள்வழங்கும் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி பகவானை வழிபடுதல் சிறப்பும், பெருமையும், கீர்த்தியும் உண்டாகவழியாகும். குருபெயர்ச்சியை முன்னிட்டு, வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதாதக்ஷிணா மூர்த்திக்கு 12-10-81 திங்கட்கிழமை முதல் லட்சார்ச்சனையும், விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் நிகழவுள்ளன. அன்பர்கள், **லட்சார்ச்சனையில், ஒரு சகஸ்ரநாமஅர்ச்சனைக்கு ரூ 12—00** வீதம் செலுத்தி பங்குகொண்டு உய்வார்களாக.

Printed & Published by V. Ramaiah Pillai. Manager, Dharmapuram
... Gnanasambandam Press, Dharmapuram, Mayuram. 10-10-81